Allianz

அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டட் (Allianz Insurance Lanka Limited)
கம்பனி இல. பீபி PB 5179
நிலைகள் 25-27, One Galle Face கோபுரம், எண் 1யு, சென்டர் ரோட், காலி முகத்திடல் , கொழும்பு 02 .
தொலைபேசி: 011-2303300 இணையத்தளம்: www.allianz.lk மின்னஞ்சல்: info@allianz.lk

# மோட்டார் காப்புறுதி ஒப்பந்தம்

உங்கள் அலியான்ஸ் மோட்டார் காப்புறுதி ஒப்பந்தம் என்பது உங்களுக்கும் மற்றும் எங்களுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தமாகும். அது உங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற முன்மொழிவு மற்றும் பிரகடனம் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படும்.

கட்டுப்பணம் செலுத்தப்படுவதற்கு அமைவாக, உங்கள் காப்புறுதி ஒப்பந்தம் உங்கள் ஒப்பந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் அமுலுக்கு வருகின்றது என்பதோடு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலம் வரைத் தொடரும் என்பதோடு காப்பீட்டுக் காலத்தின் இறுதித் திகதியில் நள்ளிரவில் முடிவடையும் என்பதோடு நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பணம் புதுப்பித்தல் கொடுப்பனவு என்வற்றுக்கு அமைவாக உங்கள் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு உங்களுடன் நாம் உடன்பட்ட பின்னர் ஏதேனும் காலத்துக்காக ஒப்பந்தம் மேலும் தொடரப்படும்.

காப்புறுதி செய்யப்படுகின்ற வரையறைகள், கொடுப்பனவுத் தேவைப்பாடுகள், நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விலக்கல்கள் என்பன உங்கள் காப்புறுதி ஒப்பந்தத்தின் இயைபுடைய பிரிவுகளுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

காப்புறுதி ஒப்பந்தம், முன்மொழிவுப் படிவம், காப்புறுதியின் நடைமுறை சான்றிதழ் மற்றும் அட்டவணை என்பன ஒரே ஒப்பந்தமாக வாசிக்கப்படும்.

## காப்பீடு

உங்கள் அட்டவணை மற்றும் காப்புறுதிச் சான்றிதழ் என்பவற்றில் குறிப்பிடப்பட்டவாறும் மற்றும் உங்கள் ஒப்பந்தத்துக்கான நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விலக்கல்கள் என்பவற்றுக்கு அமைவாகவும்,

அ. முழுமையானது
பிரிவு 1 மற்றும் 2 ஏற்புடையவையாகும்
பிரிவு 3 தனியார் கார்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்

ஆ. மூன்றாம் தரப்பினர் மாத்திரம்
பிரிவு 2 ஏற்புடையதாகும்

## பொறுப்பின் வரையறைகள்

ஏதேனும் ஒரு விபத்து.'.இழப்பு தொடர்பில் எமது பொறுப்பானது ஒப்பந்தத்தில் அல்லது அட்டவணையில் வேறு வகையில் குறிப்பிடப்படாவிட்டால் பின்வருமாறு வரையறுக்கப்பட்டிருக்கும்

| | தனியார் கார்கள் | இபோச உடன் இணைந்து வாடகைக்காக ஓடுகின்ற ஒம்னி பேரூந்துகள் | சகல ஏனைய வாகனங்கள் |
|---|---|---|---|
| பிரிவு 2–1(1) இன் கீழ் எமது பொறுப்பு | வரையறை-றயற்றது | வரையறை-றயற்றது | வரையறை-றயற்றது |
| பிரிவு 2–1(11) இன் கீழ் எமது பொறுப்பு | ரூ.10 மில்லியன் | ரூ.5 மில்லியன் | ரூ.15,000.00 |

## பிரிவு 1:
## உங்கள் வாகனத்துக்கான காப்பீடு

1. பின்வரும் காரணங்களினால் உங்கள் வாகனத்துக்கான அதன் உதிரப்பாகங்கள் உட்பட சேதம் அல்லது இழப்புக்காக நாங்கள் காப்பீடு செய்வோம்;
   (i) மோதல், விழுதல் அல்லது ஏதேனும்
   (ii) தீ, வெளிவாரியான குண்டு வெடிப்பு, சுய பற்றவைப்பு அல்லது மின்னல்
   (iii) தீங்கிழைக்கும் செயல்கள்
   (iv) வீடுபுகுந்து திருடுதல், வீடுடைப்பு அல்லது களவு
   (v) நில அதிர்வு, நிலச் சறுக்கு, நிலச்சரிவு, பாறைச் சரிவு, வெள்ளம், புயல், கொந்தளிப்பு, சூறாவளி, புயல், சுழல் காற்று, ஆலம்கட்டி மழைப்புயல், உறைபனி, புயல் காற்று, கடல் அலைகள், சுனாமி, கடல் அதிர்வு, மற்றும் எரிமலை வெடிப்பு.
   (vi) பாதை, புகையிரதப் பாதை, உள்நாட்டு நீர் வழி, பாரம் தூக்கி அல்லது பொறி உயர்த்தியில் செல்கின்ற போது.

2. எவ்வாறாயினும், நாம் பின்வருவனவற்றுக்கு கொடுப்பனவு மேற்கொள்வதில்லை;
   (i) ஏக நேரத்தில் வாகனத்தக்கும் ஏனைய சேதம் ஏற்படாத வரை டயர்கள் மற்றும் டியூப்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள். அத்தகைய சந்தர்ப்பத்தில், எமது பொறுப்பு டயர்கள்.'.டியூப்களின் மீள்பொருத்துதல் கிரயத்தின் 50% சதவீதத்துக்கு மேற்பட மாட்டாது. ;
   (ii) ஏக நேரத்தில் மோட்டார் வாகனத்துக்கும் ஏனைய சேதம் ஏற்படாத வரை வாகனத்தின் காற்றுப் பைகளுக்காக.
   (iii) தனியார் கார்கள் தொடர்பில் தவிர்ந்த ஒரே நேரத்தில் வாகனம் திருடப்படாத வரை கொள்ளை, வீடுடைப்பு அல்லது களவு என்பவற்றால் பாகங்கள், உதிரிப்பாகங்கள்.'. முக்கிய பாகங்கள் என்பவற்றுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதத்துக்காக
   (iv) அதிக சுமையேற்றல் மூலம் அல்லது விகாரமடைதல் மூலம் அல்லது உங்கள் வாகனத்தின் சுமையின் தன்மையினால் ஏற்படுகின்ற விளைவாந்தன்மையுடைய இழப்பு, பெறுமானத் தேய்வு, தேய்மானம், இயந்திரரீதியாக அல்லது இலத்திரனியல் ரீதியான செயலிழப்பு, தவறுகைகள் அல்லது முறிவுகள் தொடர்பில்,
   (v) உங்கள் வாகனத்துக்கான ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்காக,
      (a) உங்கள் ஊழியரால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சாரதியால் களவு அல்லது மாற்றத்தின் கராணமாக,
      (b) உற்பத்தியாளரின் வழிகாட்டுதல்கள் மீறுகின்ற முறையில் வாகனத்தை செலுத்துகின்ற போது,
      (c) சேதத்துக்குப்பட்ட வாகனத்தை இழுத்துச் செல்தல், போக்குவரத்துச் செய்தல். சுமையேற்றுதல் அல்லது கையாளுதலின் போது உங்கள் அல்லது உங்களின் பிரதிநிதியின் கவனயீனத்தின் காரணமாக இழப்பு ஏற்பட்டால்,
      (d) ஹைட்ரொலிக் லொக் (hydraulic lock), எண்ணைக் கசிவு, எண்ணை தீர்ந்து போதல் அல்லது குளிரூட்டியின் கசிவு காரணமாக.

3 பேருந்துகளாக, ஒம்னி பேருந்துகளாக, மற்றும் மோட்டார் கோச்களாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் முன்/பின் கண்ணாடி/(கள்)/யன்னல்கள் என்பவற்றுக்கான சேதங்களுக்காக ஒன்றில் உங்கள் காப்புறுதி செய்யப்பட்ட தொகையின் 10% சதவீதம் அல்லது இழப்பு ஏற்படுகின்ற நேரத்தில் உங்கள் வாகனத்தின் உண்மையான சந்தைப் பெறுமதி இதில் எது குறைவோ அத்தொகையை நாம் வழங்குவோம்.

4 விபத்தொன்றின் காரணமாக வாகனம் இயலாமைக்கு உட்படுகின்ற சந்தர்ப்பத்தில் நியாயமான பாதுகாப்புச் செலவு மற்றும் எங்களால் அங்கீகரிக்கப்பட்ட அண்மைய திருத்துதல் நிலையத்துக்கு கொண்டு செல்லல் செலவு மற்றும் வாகனத்தை உங்களுக்கு மீள ஒப்படைப்பதற்கான செலவை நாம் உங்களுக்கு வழங்குவோம். எவ்வாறாயினும், ஏதேனும் ஒரு விபத்து அல்லது இழப்பு தொடர்பில் உந்துருளிக்கான ஆகக் கூடுதலாக ரூ. 500/- தொகையும் ஏனைய வாகனங்களுக்காக ரூ. 1,500/- தொகையும் வழங்கப்படும்.

5 ஒரே நேரத்தில் உங்கள் வாகனம் ஏனைய சேதத்துக்கு உட்படுகின்ற விடத்து உங்கள் மின்கலம் (Battery) அல்லது இன்வேர்டர் இற்கான விபத்து ரீதியான சேதத்துக்காக நாங்கள் உங்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்வோம்.

மின்கலம் அல்லது இன்வேர்டர் தொடர்பான எமது பொறுப்பானது உங்கள் வாகனத்தின் காப்புறுதி செய்யப்பட்ட தொகையின் 10% சதவீதம் அல்லது விபத்து நடக்கின்ற நேரத்தில் உங்கள் வாகனத்தின் உண்மையான சந்தைப் பெறுமதியின் 10% சதவீதம் அல்லது அதே வகை மின்கலம் அல்லது இன்வேர்டர் ஒன்றின் நடைமுறை சந்தைப் பெறுமதி அல்லது சேதம் ஏற்படுவதற்கு முன் இருந்த நிலைமைக்கு மின்கலத்தை அல்லது இன்வேர்டரை திருத்துவதற்கான செலவு இதில் எது குறைவாக இருக்குமோ அத்தொகைக்கு வரையறுக்கப்பட்டிருக்கும் (இது களப்பு/மின் (Hybrid/Electric) வாகனங்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்).

6 இபோச உடன் ஒருங்கிணைந்து வாடகைக்காக ஒம்னி பேருந்துகளுக்கு (முஅதைிரளநள) உங்கள் காப்புறுதி விரிவாக்கப்பட்டிருக்கின்ற விடத்து;

(i) பிரிவு 1 இன் கீழ் ஏனைய ஏற்புடைய மிகைகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு உரிமைக்கோரிக்கை மீதும் ரூபாய் 5,000/- தொகைக்கு உங்கள் ஒப்பந்தம் உட்பட்டதாகும்.

(ii) உங்கள் ஒவ்வொரு சாரதிகள் தொடர்பிலும் அவர்கள் உங்கள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வாகன வகுப்பை செலுத்துவற்கு பொருத்தமானவர்கள் என உறுதிப்படுத்தி இலங்கை ஒடோமொபைல் நிறுவனத்தால் (ACC) வழங்கப்பட்ட தகைமைச் சான்றிதழை எமக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு அவர்களின் சாரதி அனுபவம் உரிய வகுப்பில் மூன்று (3) வருடங்களுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

(iii) உங்கள் சாரதியின் வயது 65 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும் என்பதோடு உங்கள் வாகனத்தை 35 வருடங்களுக்கு குறைந்த நபரால் செலுத்தப்பட்டால், உங்கள் ஏதேனும் உரிமைக் கோரிக்கையானது ஒப்பந்தத்தின் கீழ ஏனைய மிகைகளுக்கு மேலதிகமாக ரூபாய் 1,000/- தொகைக்கு அமைவானதாக இருக்கும்.

(iv) உங்கள் வாகனம் புதிய வாகனம் அல்லாமல் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட இரண்டாந்தர வாகனமாக இருந்தால், உற்பத்தியாளரிடமிருந்து அல்லது அவரது உள்நாட்டு முகவரிடமிருந்து அல்லது இலங்கை ஒடோமொபைல் நிறுவனத்திலிருந்து பொருத்தமான தன்மை மற்றும் பாதை செல்லுபடித் தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு நீங்கள் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(எ) உங்கள் வாகனத்தின் பாகத்தை உருவாக்குகின்ற ஏதேனும் கருவி அல்லது இணைப்புக்களால் ஏற்படுகின்ற மரணம், காயம் அல்லது சேதம்.

7 உங்கள் ஒப்பந்தம் வாடகைக்கு அமர்த்துதலை உட்படுத்தி விரிவாக்கப்பட்டிருக்கின்ற விடத்து;

(i) கட்டணம் அல்லது வெகுமதி ஒன்றுக்காக பயணிகளை அல்லது பொருட்களை கொண்டு செல்வதற்கு உங்கள் வாகனம் உங்களால் அல்லது உங்கள் ஊழியரால் அல்லது உங்கள் அங்கீகரிக்கப்பட்ட சாரதியால் வாகனத்தை செலுத்தியிருக்க வேண்டும்.

(ii) உங்கள் வாகனம் உங்கள் கட்டுக்காப்பில், கட்டுப்பாட்டில் மற்றும் மேற்பார்வையின் கீழ் இருக்க வேண்டும்.

## பிரிவு 2:
## மூன்றாம் தரப்பினர்களுக்கான பொறுப்பு

1. உங்கள் பொறுப்பு வரையறைகளுக்கு அமைவாக, பின்வரும் விடயங்கள் தொடர்பில் உங்கள் வாகனம் உட்படுகின்ற விபத்தொன்றின் விளைவாக எழுகின்ற உங்கள் சட்ட ரீதியான பொறுப்பை நாம் காப்பீடு செய்வோம்;

(i) எவரேனும் ஆளுக்கு விபத்து ரீதியான மரணம் அல்லது உடல் ரீதியான காயம்.

(ii) ஏதேனும் ஆதனத்துக்கான சேதம்.

(iii) விபத்து நடக்கின்ற போது உங்கள் கட்டணம் அறவிடுகின்ற பயணிகள் கொண்டு செல்கின்ற வாகனத்திலிருந்து அல்லது பயணிக்கின்ற போது பயணிகளை ஏற்றுகின்ற போது அல்லது கீழிறக்குகின்ற போது எவரேனும் பயணிக்கு ஏற்படுகின்ற மரணம் அல்லது உடல் ரீதியான காயம். ஓர் பயணிக்கான எமது அதி கூடிய பொறுப்பு ரூபாய் 2,000/- ஆகும். வாகனம் ஆகக் கூடுதலாக அனுமதிக்கப்பட்ட பயணிகளை விடவும் அதிகமாக எண்ணிகையிலான பயணிகளைக் கொண்டு சென்றால், எம்மால் செலுத்தப்படக் கூடிய மொத்த உரிமைக் கோரிக்கை தொகையை விகிதாசாரத் தொகை ஒன்றாக எமக்கு நீங்கள் செலுத்த வேண்டும்.

2. எவ்வாறாயினும், பின்வருவம் விடயங்களை நாம் காப்பீட்டுக்கு உட்படுத்துவதில்லை;

(i) அத்தகைய தொழில் வாய்ப்பு காரணமாக உங்கள் வீட்டுத்துறை அங்கத்தவர் ஒருவருக்கு அல்லது உங்கள் தொழில் வாய்ப்பில் ஆள் ஒருவருக்கு ஏற்படுகின்ற மரணம் அல்லது உடல் ரீதியான காயம்.

(ii) உங்களுக்கு சொந்தமான அல்லது உங்களால், உங்கள் குடும்ப அங்கத்தவர்களால் அல்லது உங்கள் சார்பில் செயற்படுகின்ற அல்லது உங்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்களினால் நம்பிக்கையின் அடிப்படையில் வைக்கப்பட்ட அல்லது உங்களின் கட்டுக்காவலில் அல்லது கட்டுக்காப்பின் கீழ் உள்ள ஆதனத்துக்கான சேதம்.

(iii) உங்கள் வாகனத்தின் நிறையினால் அல்லது உங்கள் வாகனத்தில் ஏற்றப்பட்ட சுமையினால் அல்லது அதிர்வினால் ஏதேனும் பாலத்துக்கு மற்றும்∴அல்லது நிறுத்தல் பாலத்துக்கு, நீண்ட பாலத்துக்கு, ஏதேனும் பாதைக்கு அல்லது கீழுள்ள ஏதேனும் ஒன்றுக்கு ஏற்படுகின்ற சேதம்.

(iv) உங்கள் வாகனத்தின் பொருட்கள் ஏற்றி இறக்குதல் தொடர்பில் ஏதேனும் சுமந்து செல்லல் வழியின் அல்லது பொதுப்பாதையின் எல்லைகளுக்கு அப்பால் ஏற்படுகின்ற அல்லது எழுகின்ற இறப்பு, காயம் அல்லது சேதம் (தனியார் கார்கள் மற்றும் உந்துருளிகள் என்பவற்றுக்கானவை தவிர்ந்தது).

(v) உங்கள் வாகனத்திலிருந்து வருகின்ற தீப்பொறிகள் அல்லது சாம்பலினால் ஏற்படுகின்ற அல்லது உங்கள் வாகனத்தின் கொதிகலன் ஒன்றின் வெடிப்பினால் அல்லது வெடிப்பிலிருந்து ஏற்படுகின்ற ஆதனத்துக்கான சேதம்.

(vi) உங்கள் வாகனத்தின் பாகம் ஒன்றாகவுள்ள ஏதேனும் கருவியால் அல்லது இணைப்புக்களால் ஏற்படுகின்ற

இறப்பு, காயம் அல்லது சேதம்.

3. எமது எழுத்த மூல சம்மதத்தை பெற்றுக் கொள்வதற்கு அமைவாக சகல கிரயங்கள் மற்றும் செலவினங்களையும் நாம் வழங்குவோம்.

4. உங்கள் வாகனம் அங்கீகரிக்கப்பட்ட ஆள் ஒருவரினால் செலுத்தப்பட்டால் பின்வரும் சந்தர்ப்பங்களில் அத்தகைய ஆளை நாம் காப்பீடு செய்வோம்;
   (i) அத்தகைய ஆள் ஏதேனும் ஏனைய காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் காப்பீட்டுக்காக தகுதி பெறாவிட்டால்,
   (ii) அத்தகைய ஆள் உங்கள் காப்புறுதி ஒப்பந்தத்தின் சகல ஏற்பாடுகளையும் கண்டிப்பாக பின்பற்றியிருத்தல்.

5. இந்த ஒப்பந்தத்தின் கீழ் காப்பீடு செய்வதற்கு தகவுடைய எவரேனும் ஆளின் தனிப்பட்ட பிரதிநிதிகளை நாம் காப்பீடு செய்வோம், ஆனால் அத்தகைய தனிப்பட்ட பிரதிநிதிகள் காப்புறுதி ஒப்பந்தத்தின் சகல நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விலக்கல்களை பின்பற்றுதல், பூர்த்தி செய்தல் மற்றும் கடைபிடித்தல் வேண்டும்.

6. எமது சுயமான விருப்பத்தில்
   (அ) இந்த காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட ஒரு உரிமைக்கோரிக்கையில் விளைவை ஏற்படுத்துகின்ற உங்கள் வாகனத்தால் ஏற்படுகின்ற ஏதேனும் மரணம் தொடர்பில் ஏதேனும் விசாரணையில் அல்லது மரண விசாரணையில் உங்களை நாம் பிரதிநிதித்துவம் செய்வோம்.
   (ஆ) இந்த காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட ஒரு உரிமைக்கோரிக்கையில் விளைவை ஏற்படுத்துகின்ற உங்கள் வாகனத்தால் ஏற்படுகின்ற ஏதேனும் மரணம் தொடர்பில் ஏதேனும் விசாரணையில் அல்லது மரண விசாரணையில் உங்களை நாம் பிரதிநிதித்துவம் செய்வோம்.

## பிரிவு 3:
## மருத்துவ செலவினங்கள் (தனியார் கார்களுக்கு மாத்திரம்)

உங்கள் கார் மூலம் ஏற்படுகின்ற விபத்தொன்றிலிருந்து ஏற்படுகின்ற ஏதேனும் உடல்ரீதியான காயத்துக்காக உங்களுக்கும் மற்றும் உங்கள் காரில் உள்ள சம்பளம் செலுத்துகின்ற சாரதி தவிர்ந்த எவரேனும் வேறு நபருக்கும் ஏதேனும் ஒரு விபத்துக்கு ஆகக்கூடுதலாக ரூபாய் 1500.00 தொகை வரை நியாயமான மருத்துவ செலவினங்களை நாம் வழங்குவோம்.

## பிரிவு 4:
## பொது விலக்கல்கள்

பின்வரும் ஏதேனும் இழப்பு அல்லது சேதம் அல்லது பொறுப்புக்காக நாம் கொடுப்பனவு மேற்கொள்வதில்லை

1. இலங்கை நில எல்லைகளுக்கு வெளியே ஏற்பட்டவை.

2. ஏதேனும் ஒப்பந்த ரீதியான பொறுப்பிலிருந்து எழுகின்ற விடயங்கள்.

3. பின்வரும் சந்தர்ப்பங்களில் நிகழ்கின்ற அல்லது ஏற்படுகின்ற விபத்துக்கள்;
   (i) நடைமுறை மோட்டார் காப்புறுதி சான்றிதழினால் அனுமதிக்கப்படாத ஏதேனும் நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுகின்ற போது,
   (ii) நடைமுறை மோட்டார் காப்புறுதி சான்றிதழினால் அங்கீகரிக்கப்படாத எவரேனும் ஆளினால் வாகனம் செலுத்தப்படுதல் அல்லது அத்தகைய ஆளின் கட்டுப்பாட்டின் கீழ் வாகனம் செலுத்தப்படுதல்.

4. ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு எதிரியின் செயல், விரோதங்கள் அல்லது நடவடிக்கைகள் போன்ற யுத்தம், சிவில் யுத்தம், கலவரம், வேலை நிறுத்தம், சிவில் பதட்டம், கலகம், இராணுவ அல்லது கிளர்ச்சி, கடும் எதிர்ப்பு, இராணுவ அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றல் அல்லது இத்தகைய நிகழ்வுகளின் ஏதேனும் விளைவினால் நேரடியாக அல்லது மறைமுகமாக எழுகின்ற விடயங்கள்.

5. விபத்து அல்லது இழப்பு ஏற்படுகின்ற நேரத்தில் ஏதேனும் போதையூட்டுகின்ற மதுபானம் அல்லது போதைப் பொருட்கள் அல்லது ஏதேனும் ஏனைய போதையூட்டக் கூடிய வஸ்துக்கள் வழியால் அல்லது முறையால் அவற்றைப் பயன்பத்திக் கொண்டு அல்லது பயன்படுத்திவிட்டு நீங்கள் அல்லது எவரேனும் ஆள் உங்கள் வாகனத்தை செலுத்துதல்.

6. (அ) ஏதேனும் மைக்ரோ சிப், பதியப்பட்ட சிப்கள், ஒருங்கிணைக்கப்பட்ட மின் சுற்று அல்லது அவை போன்ற கருவிகள் உட்பட அவற்றின் உண்மையான பஞ்சாங்க திகதியாக ஏதேனும் திகதியை சரியாக அடையாளம் காண்பதற்கு தவறுகையினால் மின் தடை, தவறுகை அல்லது தொடர்பு துண்டிக்கப்படுதலினால் ஏற்படுகின்ற விடயங்கள்.
   (ஆ) ஏதேனும் கணனி முறைமை, கணனி மென்பொருள் நிகழ்ச்சி, தீங்கான குறியீடு, கணனி வைரஸ் அல்லது செயன்முறை அல்லது மற்றவர்களுக்கு திங்கிளைப்பதற்கு ஏதேனும் ஏனைய இலத்திரனியல் முறைமையின் பயன்பாடு அல்லது இயக்கத்திலிருந்து எழுகின்ற விடயங்கள்.

7. பின்வரும் விடயங்களால் ஏற்படுகின்ற:
   (அ) ஏதேனும் அணு எரிபொருளிலிருந்து அல்லது ஏதேனும் அணு கழிவிலிருந்து அல்லது அணு எரிபொருளின் எரிப்பிலிருந்து கதிரியக்கத்திலிருந்து அயனாக்க கதிர்வீச்சுக்கள் அல்லது அவற்றின் மூலம் மாசடைதல்;
   (ஆ) ஏதேனும் அணு பொருத்துதல், அணு உலை அல்லது ஏனைய அணு சேர்க்கை அல்லது அதன் அணுக் கூறின் கதிரியக்க, நச்சு, வெடிபொருள் அல்லது ஏனைய தீங்கான அல்லது மாசுபடுத்துகின்ற துணிக்கைகள்:
   (இ) அணு அல்லது அணுப்பிளப்பு மற்றும்∴அல்லது அணுச்சேர்க்கை அல்லது ஏனைய அதுபோன்ற எதிர்வினை அல்லது கதிரியக்க சக்தி அல்லது விடயத்தை ஈடுபடுத்துகின்ற ஏதேனும் ஆயுதம் அல்லது கருவி.
   (ஈ) ஏதேனும் இரசாயனம், உயிரியல், உயிர் இரசாயனவியல் அல்லது மின் காந்த ஆயுதம்.

8. (அ) வளைவினால் ஏற்படுகின்ற உங்கள் வாகனத்துக்கான இழப்பு அல்லது சேதம்.
   (ஆ) பொலிஸ் அலுவலர் ஒருவரால் உங்கள் வாகனம் செலுத்தப்படுகின்ற போது/ தடுத்து வைக்கப்படுகின்ற போது உங்கள் வாகனத்துக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.
   (இ) குத்தகை/நிதிக் கம்பனி ஒன்று சார்பில் செயற்படுகின்ற ஆட்களினால் உங்கள் வாகனம் பறிமுதல் செய்யப்படுகின்ற போது அல்லது பொறுப்பேற்கப்படுகின்ற போது மற்றும் சொல்லப்பட்ட வாகனம் அத்தகைய கம்பனியின் கட்டுக் காவல் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற போது ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.
   (ஈ) உங்களால் அல்லது உங்கள் சார்பில் செயற்படுகின்ற எவரேனும் ஆளினால் விபரிக்கப்படுகின்றவாறு

வாகனத்தின் இழப்பு அல்லது வாகனத்துக்கான விபத்து அல்லது சேதத்தின் விபரிப்புடன் இணங்காத காரணத்தினால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

(உ) உங்களின் அல்லது எவரேனும் அங்கீகரிக்கப்பட்ட சாரதியின் ஏதேனும் தவறை அல்லது சட்டமுரணான செயலைப் புரிவதற்கு வாகனம் பாவிக்கப்படுகின்ற போது ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

9. உங்கள் வாகனத்துக்கு அல்லது அதன் உதிரிப்பாகங்களுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்;

(அ) உங்கள் வாகனத்தில் சுமையேற்றல் அல்லது சுமையிறக்கலின் போது அல்லது ஒரு வர்த்தகத்தில் கருவியாகப் பயன்படுத்தப்படுகின்ற போது வாகனத்தை இயக்குதல், தட்டுதல் அல்லது வாகனம் விழுதலின் விளைவாக ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

(ஆ) கூட்டங்கள். பேரணிகள், பந்தயங்கள், சோதனைகள், காட்சிப்படுத்தல்கள், வேகப் போட்டி அல்லது ஏனைய ஏதேனும் தீங்கு எற்படக் கூடிய விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதன் விளைவாக ஏற்படக் கூடிய இழப்பு அல்லது சேதம்.

10. இலங்கை தவிர்ந்த ஏதேனும் ஏனைய நாடொன்றில் மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் குறைபாடு அல்லது ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்தல் தொடர்பில் ஏற்படுகின்ற எவையேனும் செலவினங்களுக்காக.

11) தடை உப்பிரிவு

ஐக்கிய நாடுகள் ஒழுங்கு விதிகள் அல்லது ஐரோப்பிய சங்கம், ஐக்கிய இராச்சியம் அல்லது ஐக்கிய அமெரிக்க வர்த்தக அல்லது பொருளாதார தடைகள் சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளின் கீழ் எவையேனும் தடைகள், விலக்கல் அல்லது வரையறைக்கு முகம் கொடுக்கின்ற காப்புறுதி பெறுனரின் அத்தகைய காப்பீட்டின் ஏற்பாட்டின் விரிவாக்கத்துக்கு இதன் கீழ் ஏதேனும் உரிமைக் கோரிக்கையை செலுத்துவதற்கு அல்லது அனுகூலத்தை வழங்குவதற்கு அத்தகைய உரிமைக் கோரிக்கை கொடுப்பனவு அல்லது அத்தகைய அனுகூலத்தின் ஏற்பாட்டை எந்த காப்புறுதி பெறுனருக்கும் காப்பீட்டை வழங்குவதற்கு கருதப்பட மாட்டார் என்பதோடு அத்தகைய எந்த காப்புறுதி பெறுனருக்கும் வழங்குவதற்கு பொறுப்புடையவராக இருக்க மாட்டார்.

## நிபந்தனைகள்

1. உரிமைக்கோரிக்கைகள்

(i) ஒரு விபத்து அல்லது இழப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் உடனடியாக காப்புறுதிச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள எமது அழைப்பு நிலைய இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் எமக்கு நீங்கள் அறியத்தர வேண்டும். சகல கடிதங்கள், உரிமைக்கோரிக்கை, எழுத்தாணை அல்லது அழைப்பாணை என்பவற்றை உமக்கு கிடைத்தவுடனேயே உடனடியாக எமக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் வாகனத்தால் ஏற்படுகின்ற ஏதேனும் விபத்து அல்லது இழப்பு தொடர்பிலான ஏதேனும் எதிர்வரக் கூடிய வழக்கு தொடர்பிலும் நீங்கள் எமக்கு உடனடியாக அறியத்தர வேண்டும்.

உங்கள் வாகனத்தின் களவு அல்லது ஏதேனும் குற்றவியல் செயல் தொடர்பில் பொலிசாருக்கும் உடனடியாக அறியப்படுத்த வேண்டும் என்பதோடு குற்றவாளியை முன்னிலைப்படுத்தவதற்கு எம்முடனும் ஒத்துழைக்க வேண்டும்.

(ii) விபத்தொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் எமது எழுத்து மூல முன்னறிவித்தல் இல்லாமல் வாகனத்தின் ஏதேனும் பாகத்தை அகற்றுவதற்கோ அல்லது திருத்தங்களை மேற்கொள்ளவோ கூடாது.

(iii) (அ) எமது எழுத்த மூல அங்கீகாரம் இல்லாமல் பொறுப்பை கையளித்தல், வாக்குறுதியளித்தல், கொடுப்பனவு மேற்கொள்ளல் அல்லது ஏற்றுக் கொள்தல் கூடாது. ஏதேனும் உரிமைக் கோரிக்கை தொடர்பில் எதிர்வாதம் அல்லது ஏதேனும் உரிமைக் கோரிக்கை அல்லது வழக்கின் தீர்ப்பனவை உங்கள் பெயரில் எமது சொந்த தீர்மானத்தில் நாம் பொறுப்பேற்று நடத்துவோம். அத்தகைய நடவடிக்கை முறையை நடத்துவதில் அல்லது ஏதேனும் உரிமைக் கோரிக்கையை செலுத்துவதில் முழுமையான தீர்மானம் மேற்கொள்ளும் தற்றுணிபு எமக்கிருக்கும் என்பதோடு எமக்குத் தேவையான சகல தகவல்களையும் மற்றும் உதவியையும் நீங்கள் எமக்கு வழங்க வேண்டும்.

(ஆ) அத்தகைய உரிமைக்கோரிக்கைக்கு எழுச்சியைத் தருகின்ற ஏதேனும் நிகழ்வு நடந்த பின்னர் மற்றும் ஏதேனும் எதிர்வாதத்தை, தீர்ப்பனவை அல்லது நடவடிக்கைமுறையை நடாத்துவதிலிருந்து விலகுவதற்கும் எந்த நேரத்திலும் உங்களுக்கு (தனியார் கார்கள் ஈடுபாடு தவிர) எவரேனும் மூன்றாம் தரப்பினர் ஆதன உரிமைக்கோரிக்கையின் கீழ் முழுமையாக எமது பொறுப்பை கொடுப்பனவு செய்வோம். ஏதேனும் நடவடிக்கையில் குற்றம் சாட்டப்படுதலின் விளைவாக அல்லது அத்தகைய எதிர்வாதம், தீர்ப்பனவு அல்லது நடவடிக்கைமுறை தொடர்பில் அல்லது அத்தகைய நடத்தையின் வெளியேற்றம் காரணமாக அல்லது உங்களுக்கு அல்லது எவரேனும் ஏனைய உரிமைக் கோரிக்கையாளருக்கு ஏற்பட்ட ஏதேனும் கிரயம் அல்லது செலவினங்களுக்காக எமது தரப்பால் ஏற்பட்ட தவிர்த்தலுக்காக உங்களுக்கு ஏற்பட்டதாக குற்றம் சாட்டப்படுகின்ற ஏதேனும் சேதத்துக்காக நாம் பொறுப்பாக மாட்டோம்.

(இ) ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் போது மேற்கொள்ளப்படுகின்ற தகவல் தேடல் நடவடிக்கையில் எமக்கு அல்லது எமது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

(ஈ) உங்கள் உரிமைக்கோரிக்கை தொடர்பிலான சகல தேவைப்பாடுகளையும் நீங்கள் பூர்த்தி செய்து, திருத்தங்களை மேற்கொண்டு விபத்து அல்லது இழப்பு ஏற்பட்ட திகதியிலிருந்து அறுபது (60) நாட்களுக்குள் பரிசோதனைக்காக வாகனத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே சொல்லப்பட்டதற்கான ஏதேனும் நீடிப்பு உங்கள் எழுத்து மூல வேண்டுகோள் மற்றும் எமது எழுத்து மூல அங்கீகாரம் என்பவற்றுக்கு ஏற்ப கருத்தில் கொள்ளப்படலாம்.

(iv) ஏதேனும் விபத்து அல்லது இழப்பின் போது, அட்டவணையில் குறிப்பிடப்பட்ட உங்கள் வாகனம் அல்லது அதன் உதிரிப்பாகங்களை அல்லது மேலதிக பாகங்களை திருத்தம், மீள்-நிலைப்படுத்தல் அல்லது பதிலீடு செய்தலை நாம் மேற்கொள்ளலாம் அல்லது நாம் காசாக கொடுப்பனவை மேற்கொள்ளலாம். அத்தகைய விபத்து அல்லது இழப்பு ஏற்படுகின்ற நேரத்தில் எமது பொறுப்பானது வாகனத்தின் அல்லது அதன் சேதமுற்ற இழப்பு ஏற்பட்ட பாகங்கள் அல்லது உதிரிப்பாகங்களின் உண்மைப் பெறுமதி மற்றும் நியாயமான பொருத்துதல் கிரயம் என்பவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் ஆனால் அத்தகைய விபத்து அல்லது இழப்பு ஏற்படுகின்ற நேரத்தில் நீங்கள் காப்புறுதி செய்த தொகை அல்லது

வாகனத்தின் சந்தைப் பெறுமதியை விஞ்சமாட்டாது என்பதோடு இதில் குறைவான தொகை செல்லுபடியாகும்.

உதிரிப்பாகங்கள் அல்லது இணைப்பாகங்கள் இலங்கையில் இல்லாத சந்தர்ப்பத்தில் மேலே சொல்லப்பட்ட விடயத்துக்கு அமைவாக காசாக நாம் கொடுப்பனவை மேற்கொள்வோம்.

(அ) i. அண்மைய விபரப்பட்டியலில் (catalog) குறிப்பிடப்பட்ட விலை அல்லது ஒப்பந்தத்தில் தரப்பட்ட இணைப்பில் விபரிக்கப்பட்டவாறு உங்களால் தாங்கிக் கொள்ளப்பட்ட அத்தகைய விலையின் சதவீதத்துக்கு அமைவாக உற்பத்தியாளரால் அல்லது அவரின் உள்நாட்டு முகவரால் வழங்கப்பட்ட விலைப்பட்டியல்.

ii. விபரப்பட்டியல் அல்லது விலைப்பட்டியல் இல்லாதிருந்தால், நியாயமான போக்குவரத்து கிரயம் (ஆகாய மார்க்கம் அல்லாத) மற்றும் இறக்குதித் தீர்வை உட்பட உற்பத்தியாளரின் வேலைகளிலிருந்த பெறப்பட்ட விலைப் பட்டியல்.

(ஆ) அத்தகைய உதிரிப்பாகங்கள் அல்லது மேலதிக பாகங்களை வாகனத்துக்கு நியாயமாகப் பொருத்துதல் கிரயம்.

(v) சீவீ இணைப்பு, பூட் கவர்ஸ், பிரேக் பேட்கள் மற்றும் லைனர்கள், உணர்விகள், கிலட்ச் மற்றும் பிரசர் பிலேட்கள், மாஸ்டர் பம்ப்கள், திருத்த கிட்கள் (பிரேக் மற்றும் கிலட்ச்), எண்ணை, வாயுக்கள், வடிப்பான்கள், கேஸ்கட்கள், பட்டிகள், பிரேக் வொ'ர்கள், ஓ-ரிங்ஸ், ஒயில் சீல்கள், ஏனைய பொதியிடல், இறப்பர் பொருட்கள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்கள் (CV joint, boot covers, brake pads and liners, sensors, clutch and pressure plates, master pumps, repair kits (brake & clutch), oil, gases, filters, gaskets, belts, brake washers, O-rings, oil seals, other packing, rubber items and other consumable items) என்பவற்றின் மொத்த பதிலீட்டு கிரயத்தின் 50% சதவீதம் நாம் செலுத்துவோம்.

(vi) உங்கள் வாகனத்துக்கு ஏற்படுகின்ற விபத்து அல்லது இழப்பு ஏற்படுகின்ற நேரத்தில் நீங்கள் மற்றும் உங்கள் அங்கீகரிக்கப்பட்ட சாரதி அத்தகைய விபத்து அல்லது இழப்பு நடந்த அண்மைய பொலிஸ் நிலையத்துக்கு மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அறிக்கையிட வேண்டும்.

2. சராசரியின் நிபந்தனை

விபத்து அல்லது சேதம் ஏற்படுகின்ற நேரத்தில் நீங்கள் காப்புறுதி செய்த தொகையை விடவும் உங்கள் வாகனத்தின் சந்தைப் பெறுமதி கூடுதலாக இருந்தால், உங்கள் உரிமைக் கோரிக்கை மதிப்பிடப்படகீ கூடிய பாகம் ஒன்றினால் குறைக்கப்படும். உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் இருந்தால், ஒவ்வொரு வாகனமும் தனியாக இந்த நிபந்தனைக்கு அமைவானதாக இருக்கும். வாகனம் ஒன்றின் சந்தைப் பெறுமதி என்பது அதே வகை தயாரிப்பு, மாதிரி, வயது மற்றும் நிலைமையைக் கொண்ட வாகனம் ஒன்றின் பெறுமதியாக இருக்கும்.

3. நியாயமான முன்னெச்சரிக்கைகள், பொருத்தமான பராமரிப்பு மற்றும் இழப்புக்களைக் குறைத்தல்

ஏதேனும் சாத்தியமான இழப்பு அல்லது சேதத்துக்கு எழுச்சியைத் தருவதிலிருந்து உங்கள் வாகனத்தை பாதுகாப்பதற்கான சகல நியாயமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதோடு உங்கள் வாகனத்தை செயற்றிறனான முறையிலும் மற்றும் பாதைத்தகுதியுடனும் பராமரிக்க வேண்டும். உங்கள் வாகனம், உங்கள் சாரதிகள் மற்றும் உங்கள் ஊழியர்களை அணுகி பரீட்சிப்பதற்கு எங்களுக்கு சுதந்திரமானதும் மற்றும் முழுமையானதுமான அனுமதி இருக்க வேண்டும். ஏதேனும் விபத்து அல்லது செயலிழப்பு ஏற்படுகின்ற போது ஆளில்லாத முறையில் உங்கள் வாகனத்தை விட்டுச் செல்லக் கூடாது என்பதோடு மேலதிக இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னர் உங்கள் வாகனம் செலுத்தப்பட்டால், உங்கள் வாகனத்துக்கு ஏற்படுகின்ற மேலதிக இழப்பு அல்லது சேதத்துக்கு அல்லது உங்கள் வாகனம் செலுத்தப்படுவதிலிருந்து எழுகின்ற அத்தகைய சேதம் அல்லது இழப்புக்கு நாம் பொறுப்பாக மாட்டோம்.

4. இரத்துச்செய்தல்

உங்களின் இறுதியாக அறியப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் 7 நாள் முன்னறிவித்தல் அனுப்புவதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை நாம் இரத்துச் செய்யலாம் என்பதோடு உங்கள் காலாவதியாகாத ஒப்பந்தக் காலத்துக்காக சார்பு விகித கட்டுப்பணம் மீள திருப்பிச் செலுத்தப்படும். அத்தோடு நீங்களும் எந்த நேரத்திலும் 7 நாள் முன்னறிவித்தல் வழங்குவதன் மூலம் உங்கள் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய முடியும் என்பதோடு நடைமுறைக் காலத்துக்காக ஏதேனும் உரிமைக்கோரிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் அல்லது எழுந்திருக்காவிட்டால் காலாதியாகிய ஒப்பந்த காலத்துக்காக குறுங்கால வீதத்தில் கட்டுப்பணத்தை கழித்த பின்னர் கட்டுப்பணத்தின் பாகம் ஒன்றை நாம் உங்களுக்கு வழங்குவோம்.
மேற்குறிப்பிட்டுள்ள குறுங்கால பணமீளப்பெறுதல் விகித அட்டவணை பின் இனைப்பின் படி சித்தரிக்கப்பட்டதாகும்

5. ஏனைய காப்புறுதிகள்

உங்கள் வாகனம் தொடர்பில் உரிமைக்கோரிக்யொன்று தொடர்புறுகின்ற நிலவுகின்ற காப்பீடு செய்யக் கூடிய ஏதேனும் ஏனைய ஒப்பந்தம் இருந்தால், ஏதேனும் இழப்பு அல்லது சேதத்தின் வரி அறவிடக்கூடிய விகிதம் ஒன்றை மாத்திரம் நாம் உங்களுக்கு வழங்குவோம். இந்த நிபந்தனையானது, இந்த ஒப்பந்தத்தின் பிரிவு 2 இன் உபபிரிவு 3(i) இன் கீழ் தவிர்க்கப்பட்ட ஏதேனும் பொறுப்புக்கு உள்ளாகமாட்டாது.

6. நடுத்தீர்ப்பு

(i) இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்காக செலுத்த வேண்டிய தொகைக்கு ஏதேனும் பிணக்கு அல்லது வித்தியாசம் இருந்தால், அத்தகைய வித்தியாசம் சகல ஏனைய வினாக்களுடன் சுயாதீனமாக இதில் தரப்பட்டவாறு எழுத்து மூல அறிவித்தல் ஒன்றின் மூலம் நடுத்தீர்ப்புக் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.

(ii) மத்தியஸ்தத்துக்கான அத்தகைய பிணக்கை அல்லது வித்தியாசத்தை ஆற்றுப்படுத்துவதற்கு விரும்புகின்ற தரப்பினர் ("முதலாம் தரப்பினர்") எழுத்து மூல அறிவித்தலில் அவரால் நியமிக்கப்படுகின்ற மத்தியஸ்தரைப் பெயரிட்டு ("முதலாம் மத்தியஸ்தர்") அத்தகைய ஆற்றுப்படுத்தலை மேற்கொள்கின்ற ("அடுத்த தரப்பினர்") மற்றத் தரப்பினருக்கு அனுப்ப வேண்டும் என்பதோடு மற்றொரு மத்தியஸ்தரை நியமிக்குமாறு அடுத்த தரப்பிருக்கு வேண்டுகோள் விடுக்கவும் வேண்டும்.

(iii) அத்தகைய அறிவித்தல் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் மற்றொரு மத்தியஸ்தரை ("இரண்டாம் மத்தியஸ்தர்") மற்றத் தரப்பினர் நியமிக்கத் தவறுகின்ற சந்தர்ப்பத்தில், முதலாம் மத்தியஸ்தர் ஒரு தனி மத்தியஸ்தராகச் செயற்பட வேண்டும் என்பதோடு அத்தகைய தனி மத்தியஸ்தராகச் செயற்படுவதற்கு தரப்பினர்களால் அவரை கூட்டாக நியமிக்கப்படுள்ளது எனக் கருதி இறுதித் தீர்ப்பொன்றை மேற்கொள்ள வேண்டும்.

அறிவித்தல் அனுப்புதல் திகதி என்பது அத்தகைய அறிவித்தல் பதிவுத்தபாலில் சேர்க்கப்படுகின்ற திகதியாகும் என்பதோடு பதிவுத்தபால் முத்திரை அல்லது பதிவுத்தபால் பற்றுச் சீட்டு அதனை நிரூபிக்கின்ற இறுதிச் சான்றாக இருக்கும்.

மற்றைய தரப்பினர் இரண்டாம் மத்தியஸ்தரை நியமித்தால், இரண்டாம் மத்தியஸ்தர் நியமிக்கப்பட்ட இருபது (20) நாட்களுக்குள் இரண்டு மத்தியஸ்தர்களும், 1995ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இலங்கை நடுத்தீர்ப்புச் சட்டத்தின் ("சட்டம்") பிரிவு 6(3) இன் கீழ் தரப்பட்டவாறு தலைவர் ஒருவரை நியமித்துக் கொள்ள வேண்டும் என்பதோடு அத்தகைய தலைவர் முதலாம் மற்றும் இரண்டாம் மத்தியஸ்தர்களுடன் அமர்ந்து கூட்டங்களுக்கு தலைமை தாங்க வேண்டும்.

(iv) பதவி விலகல் அல்லது இறப்பு அல்லது வேறு வகை காரணமாக மத்தியஸ்தர் ஒருவரின் பதவி வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில், அந்த மத்தியஸ்தரை நியமித்த தரப்பினர், அத்தகைய பதவி வெற்றிடம் ஏற்பட்ட இருபத்தொரு (21) நாட்களுக்குள் அல்லது மற்றொரு மத்தியஸ்தரை நியமிக்க வேண்டுமென மற்றத் தரப்பினரால் எழுத்து மூல அறிவித்தல் வழங்கப்பட்ட தினத்திலிருந்து 21 நாட்களுக்குள் மற்றொரு மத்தியஸ்தரை நியமிக்க வேண்டும் இதில் எது பின்னர் நிகழுமோ அது ஏற்புடையதாகும்.

எஞ்சிய மத்தியஸ்தர் மற்றும் தலைவர் நடுத்தீர்ப்பு நடவடிக்கைளை முடிவுறுத்தி வெற்றிடமான மத்தியஸ்தர் பதவிக்கு மத்தியஸ்தர் ஒருவரை நியமிக்கத் தவறிய தரப்பினர் அதன் பின்னர், ஆரம்பத்தில் மத்தியஸ்தத்துக்கு ஆற்றுப்படுத்திய பிணக்குக்குரிய மற்றும் அல்லது வித்தியாசத்துக்ான விடயத்தை நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்த முடியாது. மத்தியஸ்த சபையில் தலைவரின் பதவி வெற்றிடமாக மாறுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய தலைமைப் பதவி வெற்றிடமாகிய திகதியிலிருந்து இருபத்தொரு (21) நாட்களுக்குள் இரண்டு மத்தியஸ்தர்களும் சேர்ந்து தலைவர் ஒருவரை நியமித்துக் கொள்ள வேண்டும்.

(v) இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் செலுத்தப்பட வேண்டிய தொகை தொடர்பில் அத்தகைய எழுகின்ற பிணக்கு அல்லது வித்தியாசம் எழுகின்ற சந்தர்ப்பத்தில், மேலே சொல்லப்பட்டவாறு அத்தகைய பிணக்கு அல்லது வித்தியாசம் எழுகின்ற திகதியிலிருந்து பன்னிரண்டு (12) பஞ்சாங்க மாதங்களுக்குள் நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்தப்படாவிட்டால், காப்புறுதி வழங்குனரால் தீர்மானிக்கப்படுகின்ற தொகை செல்லுபடியானதாக இருக்கும்.

(vi) நடுத்தீர்ப்பு நடவடிக்கைமுறைகள் கொழும்பு நகரில் நடைபெறும் என்பதோடு நடவடிக்கை முறையின் மொழி ஆங்கில மொழியாக இருக்கும் என்பதோடு தரப்பினர்களுக்கிடையில் வேறு வகையில் உடன்பாடு எட்டப்படாவிட்டால், நடுத்தீர்ப்புக்கான நடவடிக்கை முறை நடுத்தீர்ப்பு உடன்படிக்கையுடன் முரண்படாத வரை சொல்லப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறையாக இருக்கும். சொல்லப்பட்ட சட்டம் மற்றும் இந்த நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்கிடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை விட இந்த நடுத்தீர்ப்பு உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகள் மேலோங்கி நிற்கும்.

(vii) இதில் குறிப்பிடப்பட்டவாறு நடைபெறுகின்ற நடுத்தீர்ப்பொன்றில் வழங்கப்படுகின்ற தீர்ப்பு இறுதியானதும், முடிவானதும் மற்றும் இதன் தரப்பினர்களுக்கிடையே பிணிப்புடையதாகவும் இருக்கும்.

(viii) ஒவ்வொரு தரப்பினராலும் நியமிக்கப்படுகின்ற மத்தியஸ்தரின் செலவு அவரை நியமிக்கின்ற தரப்பினரைச் சார்ந்ததாகும் என்பதோடு தலைவரினது செலவு மற்றும் ஏனைய நிர்வாகச் செலவுகள் தரப்பினர்களுக்கிடையே சமமாகப் பகிரப்படும். ஒரு தனி மத்தியஸ்தர் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய மத்தியஸ்தரின் செலவுகள் தரப்பினர்களுக்கிடையே சமமாகப் பகிரப்படும்.

7. மாற்றம்

எமது பொறுப்பை பிரதானமாக பாதிக்கக் கூடிய உங்கள் வாகனத்துக்கான ஏதேனும் விசேட அம்சத்தின் ஏதேனும் மாற்றம், மெருகூட்டுதல் அல்லது சேர்த்தல் தொடர்பில் உடனடியாக நீங்கள் எமக்கு அறியத்தர வேண்டும் என்பதோடு அது தொடர்பில் கரிசனை கொண்டு எவையேனும் மேலதிக நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விலக்கல்களை நாம் விதிப்பதற்கு தகுதியுடையவராக இருப்போம்.

8. நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அவதானித்தல்

உங்கள் ஒப்பந்தத்தின் சகல நியதிகள், நிபந்தனைகள் மற்றும் உட்பிரிவுகள், அட்டவணை மற்றும் காப்புறுதிச் சான்றிதழ், முன்மொழிவுப் படிவத்தில் உள்ள கூற்றுக்கள் மற்றும் மறுமொழிகள், உரிமைக்கோரிக்கை ஒன்றில் உங்களால் தரப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் அல்லது ஆவணங்களின் பூர்த்தியான தன்மை மற்றும் சரியான தன்மை என்பவற்றின் உங்கள் உரிய அவதானிப்பு மற்றும் பூர்த்தி செய்தல் உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு எமது பொறுப்புக்கான முன் நிபந்தனைகளாக இருக்கும்.

9. மோசடியான உரிமைக்கோரிக்கைகள்

உங்கள் உரிமைக்கோரிக்கை ஏதேனும் முறையில் மோசடியான வழியில் இருந்தால் அல்லது நீங்கள் அல்லது உங்கள் சார்பில் எவரேனும் ஆள் ஏதேனும் மோசடியான முறையில், கருவிகள் அல்லது ஆவணங்களை உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் அனுகூலத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, அல்லது நீங்கள் அல்லது எவரேனும் ஆள் நீங்கள் கண்டும் காணாத முறையில் ஏதேனும் இழப்பு அல்லது சேதத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டுமென்றே மேற்கொள்கின்ற செயல் அல்லது ஏதேனும் உரிமைக்கோரிக்கைக்கு ஆதரவளிப்பதற்கு ஏதேனும் பொய்யான வெளிப்படுத்தல் அல்லது கூற்றை மேற்கொண்டால், உங்கள் ஒப்பந்தத்தின் சகல அனுகூலங்களும் பறிமுமுதல் செய்யப்படும்.

10. உரிமைக்கோரிக்கையற்ற போனஸ் (ழே ஊடயஅை டீழரெள)

காப்புறுதி காலத்தின் போது நீங்கள் ஏதேனும் உரிமைக்கோரிக்கையை மேற்கொள்ளாதிருந்தால், உங்கள் புதுப்பித்தல் கட்டுப்பணம் பின்வருமாறு

ce;JUsp kw;Wk; tu;j;jf gpNyl;
(Trade Plate) jtpu;e;jit

| காலம் | ஏற்புடைய சதவீதம் |
|---|---|
| முந்தைய வருடம் | 15% |
| முந்தைய 2ஆம் வருடம் | 25% |
| முந்தைய 3ஆம் வருடம் | 35% |
| முந்தைய 4ஆம் வருடம் | 45% |
| முந்தைய 5ஆம் வருடம் | 55% |
| முந்தைய 6ஆம் வருடம் | 60% |
| முந்தைய 7ஆம் வருடம் | 65% |
| முந்தைய 8ஆம் வருடம் | 70% (உச்சம்) |

உந்துருளிகளுக்காக

| | |
|---|---|
| முந்தைய வருடம் | 15% |
| முந்தைய 2ஆம் வருடம் | 20% |
| முந்தைய 3ஆம் வருடம் | 25% |
| முந்தைய 4ஆம் வருடம் | 30% |
| முந்தைய 5ஆம் வருடம் | 35% (உச்சம்) |

எவ்வாறாயினும், உரிமைக் கோரிக்கையொன்று மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில், உங்கள் உரிமைக் கோரிக்கையற்ற போனஸ் முந்தைய வருடத்துக்கான ஏற்புடைய சதவீதத்துக்கு குறைக்கப்படும். காப்புறுதியின் அதே காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உரிமைக் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால், உங்கள் உரிமைக்கோரிக்கையற்ற போனஸ் அதே முறையில் மேலும் குறைக்கப்படும்.

உங்கள் வாகனத்தை உரிமை மாற்றம் செய்தால் அல்லது விற்பனை செய்தால், உங்கள் உரிமைக்கோரிக்கையற்ற போனஸ் உங்கள் பெயரிலேயே இருக்கும். உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் காப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தால், அத்தகைய ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் வெவ்வேறான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தால், ஒவ்வொரு வாகனத்துக்காகவும் உரிமைகோரப்படாத போனஸ் ஏற்புடையதாக இருக்கும்.

11. சில நியதிகளின் தவிர்ப்பு மற்றும் மீட்பனவு உரிமை

இந்த ஒப்பந்தத்தினால் நட்ட உத்தரவாதமளிக்கப்படக் கூடிய எவரேனும் ஆளின் உரிமை அல்லது 1951ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் ஏற்பாடுகளின் 102 மற்றும் 105ஆம் பிரிவுகளின் கீழ் மற்றும் அவற்றின் பயனால் தொகையொன்றை மீட்டுக் கொள்வதற்காக எவரேனும் ஏனைய ஆளின் உரிமையை இந்த ஒப்பந்தம் அல்லது இதன் ஏதேனும் உப்பிரிவு பாதிக்கமாட்டாது.

ஆனால், இந்த ஏற்பாட்டுக்காக நாங்கள் செலுத்துவதற்கு பொறுப்பில்லாத எங்களால் செலுத்தப்பட்ட சகல தொகைகளையும் நீங்கள் எங்களுக்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

12. நட்டஉத்தரவாதத்தின் வரையறைகளின் பிரயோகம்

ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு நட்ட உத்தரவாதம் அளிப்பதற்கு தொடர்புடைய ஏதேனும் விபத்து ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில், நட்ட உத்தரவாதத்தின் மொத்த தொகை உங்கள் ஒப்பந்தத்தின் கீழான எமது பொறுப்பின் வரையறையை விஞ்சமாட்டாது என்பதோடு நட்டஈடு செலுத்துவதற்கு உங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

13. நியாயாதிக்கம்

இந்த ஒப்பந்தத்தினால் வழங்கப்படுகின்ற நட்ட உத்தரவாதம், அது ஒன்றில் பரஸ்பர உடன்படிக்கைகளின் வழியாக இருந்தாலும் அல்லது வேறு வகையில் இருந்தாலும், இலங்கைக்குள் நியாயாதிக்கத்தைக் கொண்ட தகைமையுடைய நீதிமன்றத்தால் முதல் தோற்றத்தில் வழங்கப்படுகின்ற அல்லது அத்தகைய நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொண்ட தீர்ப்புக்கள் தொடர்பிலும் அல்லது இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட தீர்ப்புக்களின் அமுலாக்கலுக்காக சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டளைகள் தொடர்பிலும் ஏற்புடையதாகமாட்டாது.

## மேலதிக உட்பிரிவுகள்

உங்கள் ஒப்பந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்தால் மாத்திரம் பின்வரும் உட்பிரிவுகள் ஏற்புடையதாகும்,

உங்கள் ஒப்பந்தத்தின் சகல நியதிகள், நிபந்தனைகள், மற்றும் விலக்கல்கள் வெளிப்படையாக மாற்றப்படாவிட்டால் ஏற்புடையதாக இருக்கும்.

### 1 – வாடகை கொள்வனவு / குத்தகை

உங்கள் வாகனம் உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வாடகை கொள்வனவு/.குத்தகை உடன்படிக்கை ஒன்றுக்கு அமைவாக இருந்தால், அத்தகைய நிறுவனத்தை நாம் வாகனத்தின் உரிமையாளராக கருத்தில் கொள்வோம் என்பதோடு திருத்தம், மீள்-நிலைப்படுத்தல் அல்லது பதிலீடு செய்வதன் மூலம் நல்ல நிலைமைக்கு கொண்டுவர முடியாமல் ஏதேனும் விபத்து அல்லது இழப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய உரிமைக்கோரிக்கை அத்தகைய நிறுவனத்துக்கு வழங்கப்படும் என்பதோடு அவர்களின் பெறுகை முழுமையானதும் மற்றும் இறுதியானதுமான விடுவிப்பாக எங்களுக்கு இருக்கும். மேலும் இந்த உட்பிரிவு உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் உங்களதும் மற்றும் எங்களதும் ஏதேனும் உரிமைக்கு அல்லது பொறுப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது.

### 2 – சுயமான மிகை

உங்கள் ஒப்பந்தத்தில் ஏதேனும் ஏனைய மிகைகளைக் கருத்தில் கொள்ளாமல் உங்கள் வாகனத்துக்கான ஒவ்வொரு மற்றும் சகல உரிமைக்கோரிக்கையின் சீராக்கப்பட்ட இழப்பிலிருந்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு சுயமான மிகையை நீங்கள் தாங்கிக் கொள்ள வேண்டும்.

### 3 – தனிப்பட்ட விபத்து அனுகூலங்கள்

உரிய மேலதிக கட்டுப்பணத்துக்கு அமைவாக, உங்கள் வாகனத்துக்கு ஏறுகின்ற போது அல்லது வாகனத்திலிருந்து இறங்குகின்ற போது அல்லது உங்கள் வாகனத்தில் பயணிக்கின்ற போது (அத்தகைய காயத்தின் விளைவான மருத்துவ அல்லது சத்திர சிகிச்சை மருத்தவத்துக்கு தவிர்ந்தது) உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு வன்முறையான விபத்து ரீதியான வெளிவாரி மற்றும் ஏதேனும் ஏனைய காரணத்தின் கண்ணுக்கு தென்படக் கூடிய சுயாதீன முறையில் ஏற்படுகின்ற ஏதேனும் இறப்பு அல்லது உடல்ரீதியான காயம் தொடர்பில் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற அளவுத்திட்டத்துக்கு ஏற்ப நட்டஈட்டை நாம் வழங்குவோம். இறப்பு அல்லது உடல் ரீதியான காயம் விபத்து ஏற்பட்ட திகதியிலிருந்து நூற்றி எண்பது (180) நாட்களுக்குள் நிகழலாம்.

நட்டஈட்டு அளவுத்திட்டம்

(அட்டவணையில் பிரதான வகுப்பின் கீழ் தனிப்பட்ட விபத்துக் காப்பீட்டின் கீழ் வரையறை மீதான பிரயோகம்)

| விடயம் | சதவீதம் |
|---|---|
| 1. இறப்பு | 100% |
| 2. இரண்டு கண்களிலும் சகல பார்வை முழுமையாகவும் மீட்டுக் கொள்ள முடியாதவாறு இழப்பு அல்லது மணிக்கட்டில் அல்லது மணிக்கட்டுக்கு மேல் இரண்டு கைகளிலும் அல்லது இரண்டு கால்களினதும் கணுக்கலில் அல்லது அதற்கு மேல் அல்லது ஒருகாலுடன் ஒரு கை உடல்ரீதியான பிரிப்பினால் முழுமையான இழப்பு. | 100% |
| 3. ஒரு கண்ணில் முழுமையான பார்வையின் முழுமையான மற்றும் மீட்க முடியாத இழப்புடன் ஒரு கை அல்லது காலின் மணிக்கட்டில் அல்லது அதற்கு மேல் அல்லது கணுக்காலில் அல்லது அதற்கு மேல் உடல்ரீதியான பிரிப்பினால் முழுமையான இழப்பு. | 100% |
| 4. ஒரு கையின் மணிக்கட்டில் அல்லது அதற்கு மேல் அல்லது ஒரு காலின் கணுக்காலில் அல்லது அதற்கு மேல் அல்லது ஒரு கண்ணில் முழுமையானதும் மற்றும் மீட்கமுடியாததுமான இழப்புடன் உடல்ரீதியான பிரிப்பினால் முழுமையான இழப்பு. | 50% |
| 5. உங்கள் வியாரத்திற்கு அல்லது ஏதேனும் மற்றும் சகல வகை தொழிலுக்கும் செல்ல முடியாதவாறு உங்களை தடுக்கின்ற தற்காலிக முழுமையான இயலாமை. | 26 வாரங்கள் வரை வாரத்துக்கு 0.5% |

(அ) ஏதேனும் நிகழ்வு ஒன்று தொடர்பில் நபருக்கு மேலே சொல்லப்பட்ட அளவுத்திட்டத்தில ஒரேயொரு விடயத்தின் கீழ் மாத்திரம் நாம் நட்டஈடு வழங்குவோம் என்பதோடு எமது மொத்த பொறுப்பு உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட செலுத்தப்பட வேண்டிய தொகையை விடவும் அதிகமாக இருக்கமாட்டாது.

(ஆ) பின்வரும் விடயங்களிலிருந்து ஏற்படுகின்ற ஏதேனும் இறப்பு அல்லது உடல்ரீதியான காயத்துக்காக நாம் நட்டஈடு வழங்குவதில்லைள

(i) சுயமாக ஏற்படுத்தப்படுகின்ற காயம், தற்கொலை அல்லது தற்கொலைக்கு முயற்சித்தல், பௌதீக குறைபாடு அல்லது பலவீனம்.

(ii) காயப்பட்ட ஆள் ஏதேனும் போதையூட்டக் கூடிய மதுபானம் அல்லது போதைப் பொருள் அல்லது ஏதேனும் ஏனைய போதையூட்டுகின்ற வஸ்துவை பயன்படுத்துவதனால் அல்லது அத்தகைய முறையில் அருந்துகின்ற அல்லது அருந்தியிருக்கின்ற போது இடம்பெறுகின்ற விபத்தொன்று.

(இ) உங்கள் அனுமதியுடன் காயப்பட்ட ஆளுக்கு அல்லது அவரின் சட்டரீதியான பிரதநிதிக்கு நேரடியாக நட்டஈட்டை நாம் செலுத்துவோம். அவர்களின் பெறுகையை முழுமையானதும் மற்றும் இறுதியானதுமான விடுவிப்பாக நாம் கருத்தில் கொள்வோம். (இது பயணிகள், எவரேனும் பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்கள் அல்லது சம்பளம் வழங்குகின்ற சாரதி போன்றோருக்கு ஏற்புடையதாகும்).

(ஈ) உங்கள் பதிவுச் சான்றிதழ் அனுமதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையை விடவும் அதிக ஆட்களை நீங்கள் உங்கள் வாகனத்தில் ஏற்றக் கூடாது.

(உ) விபத்து நடக்கின்ற போது காயத்துக்கு உட்டுபகின்ற நபர் 16 வயதுக்கு குறைவாக இருந்தால் அல்லது 65 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால், நாம் ஏதேனும் நட்டஈடு வழங்குவதில்லை.

(ஊ) உங்கள் ஒப்பந்தத்துக்கு வழங்கப்படுகின்ற வேலை நிறுத்தம், கலகம், சிவில் பதட்டம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான காப்பீடுகள் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டால் தவிர, இந்த அனுகூலத்துக்கு ஏற்புடையதாகாது.

(எ) மொத்த தொகை தீர்மானிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், வாராந்த நட்டஈடு ஒரு முறை செலுத்தப்படும்.

## 4 – பயணி இடர்காப்பு (பயணிகளுக்கான சட்டப் பொறுப்பு)

(வர்த்தக பயணிகள் போக்குவரத்து வாகனங்களுக்கு ஏற்புடையதாகும்)

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் வாகனத்துக்கு ஏறுதல், வாகனத்திலிருந்து இறங்குதல் அல்லது வாகனத்தில் பயணிக்கின்ற போது எவரேனும் பயணியின் இறப்பு அல்லது உடல் ரீதியான காயம் காரணமாக சட்டரீதியான பொறுப்பு தொடர்பில் உங்கள் ஒப்பந்தத்தின் பிரிவு 2 இன் கீழ் நட்ட உத்தரவாதமளிப்பதற்கு உங்களை அல்லது எவரேனும் ஏனைய ஆளை காப்பீட்டுக்கு உட்படுத்துவோம். செலுத்தப்படக் கூடிய ஆகக் கூடுதலான தொகையானது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. உங்கள் வாகனத்தின் பதிவுச் சான்றிதழில் அனுமதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமான ஆட்களை சுமந்து சென்றால், நாங்கள் செலுத்த வேண்டிய மொத்த தொகையின் வரி மதிப்பிடப்படக்கூடிய பாகம் ஒன்றை நீங்கள் எமக்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

## 5 – வேலையாட்களின் நட்டஈட்டு காப்புறுதி

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வாகனம் அல்லது வாகனங்களில் உங்கள் சேவையில் ஈடுபடுகின்ற போது உங்கள் ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு சம்பளம் வழங்கப்படுகின்ற சாரதி அல்லது உதவியாள் அல்லது துப்பரவாக்குபவர் அல்லது தொழிலாளருக்கு ஏதேனும் தனிப்பட்ட காயத்துக்காக 1934ஆம் ஆண்டின் வேலையாட்களின் நட்டஈட்டு கட்டளைச் சட்டம் மற்றும் இந்த உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்படுகின்ற அதனைத் தொடர்ந்த திருத்தங்கள் என்பவற்றுக்கு அமைவாக

நாம் நட்டஈட்டை வழங்குவோம். எமது எழுத்து மூல சம்மதத்தை பெற்றுக் கொள்வதற்கு அமைவாக, உங்களுக்கு ஏற்படுகின்ற ஏதேனும் ஏனைய கிரயம் மற்றும் செலவினங்களையும் நாம் உங்களுக்கு வழங்குவோம். ஒவ்வொரு ஒப்பந்தக் காலம் முடிவிலும், உங்கள் வாகனம் அல்லது வாகனங்கள் தொடர்பில் ஏதேனும் ஒரு நேரத்தில் ஆகக் கூடுதலாக உங்கள் சேவையில் இருக்கக் கூடிய சாரதிகள், உதவியாட்கள், துப்பரவாக்குனர்கள் அல்லது தொழிலாளர்களின் எண்ணிக்கையை நீங்கள் வழங்க வேண்டும் என்பதோடு அதற்கேற்ப, அறவிடப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் சீராக்கப்படும்.

எவ்வாறாயினும்,

(i) உங்கள் பொது ஊழியர்களின் பொறுப்பை காப்பீடு செய்கின்ற ஏதேனும் ஏனைய ஒப்பந்தத்தை நீங்கள் பெற்றிருந்தால் அல்லது அதனைப் பின்தொடர்ந்து அத்தகைய ஏதேனும் காப்புறுதிக்கு கைச்சாத்திட்டிருந்தால், இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமைக் கோரிக்கையை நாம் செலுத்த மாட்டோம்.

(ii) பின்வருவனவற்றிலிருந்து ஏற்படுகின்ற ஏதேனும் இறப்பு அல்லது உடல் ரீதியான காயத்துக்காக ஏதேனும் நட்டஈட்டை நாம் வழங்குவதில்லை

(அ) சுயமாக ஏற்படுத்தப்பட்ட காயம், தற்கொலை அல்லது தற்கொலைக்கு முயற்சித்தல், பௌதீக குறைபாடு அல்லது பலவீனம்.

(ஆ) காயப்பட்ட ஆள் ஏதேனும் போதையூட்டக் கூடிய மதுபானம் அல்லது போதைப் பொருள் அல்லது ஏதேனும் ஏனைய போதையூட்டுகின்ற வஸ்துவை பயன்படுத்துவதனால் அல்லது அத்தகைய முறையில் அருந்துகின்ற அல்லது அருந்தியிருக்கின்ற போது இடம்பெறுகின்ற விபத்தொன்று.

(iii) விபத்துக்கள் அல்லது இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு சகல நியாயமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதோடு சகல நியதிச்சட்ட கடப்பாடுகளுக்கும் இணங்கவும் வேண்டும்.

(iv) வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு சாரதி, பணியாள், துப்பரவாக்குனர் அல்லது தொழிலாளரின் விபரங்களையும் மற்றும் அவர்களின் கூலிகள், சம்பளங்கள், மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் பதிவொன்றையும் நீங்கள் வைத்திருக்க வேண்டும் என்பதோடு எந்த நேரத்திலும் அத்தகைய பதிவுகளை பார்வையிடுவதற்கு எம்மை அனுமதிக்கவும் வேண்டும்.

(v) இந்த அனுகூலத்துக்காக அறவிடப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் உங்கள் ‘உரிமைக்கோரிக்கையற்ற போனஸ்’ இற்கு அமைவாக மாட்டாது. அத்தோடு இந்த அனுகூலத்தின் கீழ் உங்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் உரிமைக்கோரிக்கை உங்கள் ‘உரிமைக்கோரிக்கையற்ற போனஸ்’ இற்கு பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது.

(vi) உங்கள் வேண்டுகோளுக்கு ஏற்ப உங்கள் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டால், இந்த உட்பிரிவு தொடர்பில் கட்டுப்பணத்தின் மீள் கொடுப்பனவு அனுமதிக்கப்பட மாட்டாது.

(vii) ஊழியர் அல்லது உறவினராக அவரின் தங்கி வாழ்பவர்கள் முழுமையான விடுவிப்பை தருகின்ற அத்தகைய தொகையை ஏற்றுக் கொள்ள உடன்பட்டால், உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் நாம் நட்டஈட்டைச் செலுத்துவோம். இல்லாவிட்டால், பொதுச் சட்டத்தின் கீழ் உங்கள் சட்டரீதியான பொறுப்பைக் காப்பீடு செய்து, எமது எழுத்து மூல சம்மதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அமைவாக ஏற்படுகின்ற கிரயங்கள் மற்றும் செலவினங்களை நாம் செலுத்துவோம்.

(viii) உங்கள் ஒப்பந்தத்துக்கு வழங்கப்படுகின்ற வேலை நிறுத்தம், கலகம், சிவில் பதட்டம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான காப்பீடுகள் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டால் தவிர, இந்த அனுகூலத்துக்கு ஏற்புடையதாகாது.

## 6 – இழுத்துச் செல்தல் கட்டணங்கள்

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, பிரிவு 1இன் உபபிரிவு 4 இன் கீழ் இழுத்துச் செல்தல் கட்டணங்கள், அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு அதிகரிக்கப்பட்டுள்ளன.

## 7 – கண்ணாடி / யன்னல்கள்

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் வாகனத்தின் உடலுக்கு சேதம் ஏற்படாமல், முன்∴பின் கண்ணாடி அல்லது யன்னல்களில் ஏதேனும் கண்ணாடி உடைந்தால் சேதத்தின் காரணத்தைக் கருத்தில் கொள்ளமல், பதிலீடு செய்தல் கிரயத்தை நாம் உங்களுக்கு வழங்குவோம். இந்த அனுகூலத்தின் கீழ் செலுத்தப்படக் கூடிய ஆகக்கூடுதலான தொகை உங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் மிகைத் தொகையைக் கருத்தில் கொள்ளாமல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு வரையறுக்கப்பட்டிருக்கும்.

## 8 - மூன்றாம் தரப்பினர் ஆதனத்துக்கான சேதம்

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வரையறை வரை உங்கள் வாகனத்தின் பயன்பாட்டினால் ஏற்படுகின்ற உரிமைக்கோரிக்கையாளர்கள் கிரயங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட மூன்றாம் தரப்பினர் ஆதனங்களுக்கான ஏதேனும் சேதம் தொடர்பில் உங்கள் சட்டரீதியான பொறுப்பை நாம் காப்பீடு செய்வோம்.

## 9 – பயில்பவர் சாரதி / உந்துருளி செலுத்துனர்

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாகவும் மற்றும் பயில்பவர் சாரதி / உந்துருளி செலுத்துனர் தொடர்பில் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு நீங்கள் இணங்கியிருப்பதையும் கருத்தில் கொண்டு, அட்டவணையில் குறிப்பிடப்பட்ட உங்கள் வாகனத்தை செலுத்துவதற்கு உங்கள் அட்டவணையில் எவரேனும் பெயர் குறிப்பட்ட ஆள் பயில்கின்ற போது ஏற்புடையதாக இருப்பதற்கு எமது காப்பீட்டை நாம் நீடிப்போம். ஏற்புடைய ஏனைய செலவனங்களுக்கு மேலதிகமாக ஒவ்வொரு மற்றும் சகல உரிமைக்கோரிக்கையிலும் நீங்கள் ரூபாய் 2,500.00 தொகையை தாங்கிக் கொள்ள நேரிடும்.

## 10 – புதிய பாகங்களின் மீள் ஈடுசெய்தல் (இரண்டாம் நிலை வாகனங்களுக்காக)

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, புதிய பாகங்களை பதிலீடு செய்வதற்கு தேவைப்படுகின்றவாறு உங்கள் வாகனத்துக்கான ஏதேனும் இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால், அத்தகைய சேதத்துக்காக புதிய பாகங்களின் கிரயத்தை நாம் உங்களுக்கு செலுத்துவோம்.

## 11 – இலங்கை போக்குவரத்து சபையின் ஒத்துழைப்புடன் வாடகைக்காக ஓடுகின்ற ஓம்னி பேரூந்து

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் ஒப்பந்தத்தின் பிரிவு 2இல் உப-பிரிவு 1(ii) இல் குறிப்பிடப்பட்டவற்றுக்கு முரணாக ஏதேனும் எவ்வாறு இருந்த

போதும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட உங்கள் வாகனத்துக்கு ஏறுதல், வாகனத்திலிருந்து இறங்குதல் அல்லது வாகனத்தில் பயணிக்கின்ற போது எவரேனும் பயணியின் இறப்பு அல்லது உடல் ரீதியான காயம் தொடர்பில் உரிமைக்கோரிக்கை மேற்கொள்பவர்களின் கிரயங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட உங்கள் சட்டரீதியான பொறுப்பை நாம் காப்பீடு செய்வோம்.

ஆனால், விபத்து நடக்கின்ற நேரத்தில், வாகனத்தின் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டவாறு உங்கள் வாகனத்தின் இருக்கை அளவுக்கு மேல் ஆட்களை சுமந்து சென்றால், நாங்கள் செலுத்த வேண்டிய மொத்த உரிமைக்கோரிக்கையின் மதிப்பிடப்படக் கூடிய பாகம் ஒன்றை நீங்கள் எமக்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

மேலும்,

(1) உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வகுப்பு வாகனத்தை செலுத்துவதற்கு உங்கள் சாரதிகள் பொருத்தமானவர்கள் என உறுதிப்படுத்துகின்ற ஒவ்வொரு சாரதி தொடர்பிலும் இலங்கை ஒடோமொபைல் அமைப்பினால் வழங்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் ஒன்றை நீங்கள் எமக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு இந்த வகுப்பின் மீது அவர்களின் அனுபவம் மூன்று (03) வருடங்களுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

(2) உங்கள் சாரதி 65 வயதுக்கு குறைந்தவராக இருக்க வேண்டும் என்பதோடு உங்கள் வாகனம் 30 வயதுக்கு குறைந்தவரால் செலுத்தப்பட்டால், ஏதேனும் உரிமைக்கோரிக்கையானது உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் ஏனைய மிகைத் தொகைகளுக்கு மேலதிகமாக ரூபாய் 1,000.00 மிகையாகச் செலுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(3) உங்கள் வாகனம் புதிய வகையல்லாததாக இருந்தால், உற்பத்தியாளர் அல்லது அவரின் உள்நாட்டு முகவர் அல்லது இலங்கை ஒடோமொபைல் அமைப்பிலிருந்து வாகனத்தின் பொருத்தப்பாடு மற்றும் பாதைத் தகைமை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ் ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## 12 – வாடகை வாகனங்கள்

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் வாகனத்தை எவரேனும் ஆளுக்கு வாடகைக்கு அமர்த்தியிருக்கின்ற போது (முதன்மை வாடகைதாரர்) அல்லது வேறொரு நபருக்கு (இரண்டாந்தர வாடகைதாரர்) மீள்-வாடகைக்கு அத்தகைய வாடகைதாரர் அனுமதித்தலின் போது உங்கள் வாகனத்துக்கு ஏற்படுகின்ற விபத்து அல்லது இழப்பை காப்பீடு செய்வதற்கு உங்கள் ஒப்பந்தம் விரிவாக்கப்படுகின்றது.

(i) முதன்மை வாடகைதாரருடன் வாடகை ஒப்பந்தம் ஒன்றுக்கு நீங்கள் கைச்சாத்திட வேண்டும். அத்தகைய வாடகைதாரர் இந்த ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்டுள்ள பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் வெளிப்படுத்தல் படிவம் ஒன்றை உரிய முறையில் பூர்த்தி செய்து கையொப்பமிட வேண்டும் என்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல் உங்கள் வாடகை ஒப்பந்தத்தின் ஒரு பாகமாக இருக்கும்.

மீள-வாடகைக்கு அமர்த்துகின்ற போது, முதன்மை வாடகைதாரர் இரண்டாந்தர வாடகைதாரருடன் மேலதிக ஒப்பந்தம் ஒன்றை மேற்கோள்வதற்கு நீங்கள் நீங்கள் உடன்பட வேண்டும். இரண்டாம் வாடகைதாரர் முதன்மை வாடகைதாரருடன் இந்த ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்டுள்ள பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் வெளிப்படுத்தல் படிவம் ஒன்றை உரிய முறையில் பூர்த்தி செய்து கையொப்பமிட வேண்டும் என்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல் உங்கள் வாடகை ஒப்பந்தத்தின் ஒரு பாகமாக இருக்கும்.

வாடகைக்கு அமர்த்தல் மற்றும்.'.அல்லது மிள்-வாடகைக்கு அமர்த்தலில், உங்கள் ஒப்பந்தத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அவதானித்தல் மற்றும் அவற்றுக்கு இணங்கிச் செயற்படுதலை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

(ii) அத்தகைய வாடகைதாரர் மோட்டார் காப்புறுதிக் காப்பீடொன்றை நிராகரித்திருக்கவோ அல்லது உரிமைக்கோரிக்கைகள் அனுபவத்தின் காரணமாக அவரின் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருத்தல் அல்லது விசேட நிபந்தனை விதிக்கப்பட்டிருத்தல் அல்லது கட்டுப்பணம் அதிகரிக்கப்பட்டிருத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடாது.

(iii) உங்கள் உரிமைக்கோரிக்கையைக் கருத்தில் கொள்வதற்கு வெளிப்படுத்தல் படிவத்துடன்(படிவங்களுடன்) சேர்த்து வாடகை ஒப்பந்தத்தின்(ஒப்பந்தங்களின்) பிரதியொன்றை நீங்கள் எமக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(iv) நாம் பின்வருவனவற்றை செலுத்துவதில்லைலூ

(அ) ஒவ்வொரு சகல உரிமைக்கோரிக்கையினதும் முதல் ரூபாய் 6000.00.

(ஆ) முதன்மை வாடகைதாரரினால் அல்லது இரண்டாம் வாடகைதாரரினால் களவிலிருந்து அல்லது மாற்றத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் உரிமைக்கோரிக்கைக்காக.

(இ) இரண்டாம் வாடகைதாரருக்குப் பின்னர் மேலதிக வாடகைக்கு அமர்த்தலிலிருந்து எழுகின்ற ஏதேனும் உரிமைக் கோரிக்கைக்காக.

## 13 – வாகனம் செலுத்துதல் தொடர்பில் கற்றுக்கொடுத்தல்

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, கற்றுக் கொடுப்பவர்கள் தொடர்பில், 1951ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, வாகனம் செலுத்துதல் கற்றுக் கொடுத்தலுக்காக உங்கள் வாகனம் பயன்படுத்தப்படுகின்ற போது உங்களை அல்லது உங்கள் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநியை நம் காப்பீடு செய்வோம்.

## 14 – தீர்வையற்ற வாகனம்

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட தொகையாக உள்நாட்டு சுங்கத் தீர்வைகள் இல்லாமல், உதிரிப்பாகங்கள் மற்றும் மேலதிக பாகங்கள் உட்பட உங்கள் வாகனத்தின் பெறுமதியை நாம் கருத்தில் கொள்வோம். பாகங்களைப் பதலீடு செய்வதற்கு தேவைப்படுகின்ற உங்கள் ஒப்பந்தத்தின் பிரிவு 1 இன் கீழ் ஏதேனும் உரிமைக் கோரிக்கை இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய பாகங்களின் உள்நாட்டு சுங்கத் தீர்வைகளை நாம் செலுத்துவதில்லை.

## 15 – வேலை நிறுத்தம், கலகம் மற்றும் சிவில் பதட்டம்

காப்புறுதி செய்தவர் மேலதிக கட்டுப்பணம் ஒன்றைச் செலுத்தியிருப்பதைக் கவனத்தில் கொண்டு, இந்த ஒப்பந்தத்தின் பொது விலக்கல் 4 இல் “வேலை நிறுத்தம், கலகம் மற்றும் சிவில் பதட்டம்” என்ற சொற்கள் பின்வருவனவற்றினால் நேரடியாக ஏற்படுகின்ற ஏதேனும் விபத்து, இழப்பு, சேதம் அல்லது பொறுப்புக்கு

ஏற்புடையதாகாது என இத்தால் வெளிப்படுத்தி உடன்பாடு எட்டப்படுகின்றது.

(1) பொது அமைதியின் ஏதேனும் இடையூறுகளில் ஏனையவர்களோடு சேர்ந்து பங்கு கொள்கின்ற எவரேனும் ஆளின் செயல் (ஒன்றில் வேலை நிறுத்தமாக அல்லது முடக்குதலாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்) அல்லது ஏதேனும் அத்தகைய இடையூறை அடக்குவதில் அல்லது அடக்குவதற்கு முயற்சித்தலில் அல்லது அத்தகைய இடையூறின் விளைவைக் குறைப்பதில் ஏதேனும் சட்டரீதியாக உருவாக்கப்பட்ட அதிகார சபையின் செயல்,

(2) வேலை நிறுத்தம் ஒன்றின் தொடர்ச்சியில் எவரேனும் வேலைநிறுத்தக்காரர் அல்லது முடக்க வேலையாளால் வேண்டுமென்றே செய்யப்படுகின்ற செயல் அல்லது ஏதேனும் அத்தகைய செயலைத் தடுப்பதில் அல்லது தடுப்பதற்கு முயற்சித்தலில் அல்லது ஏதேனும் அத்தகைய செயலின் விளைவை குறைப்பதில் ஏதேனும் சட்டரீதியாக உருவாக்கப்பட்ட அதிகார சபையின் செயல், ஆயினும் இந்த உட்பிரிவின் காரணத்தால் தரப்பட்ட நட்டஉத்தரவாதம், கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் பங்களிப்பினால் அல்லது கண்டறிதலினால் அல்லது அவற்றின் தொடர்பிலிருந்து எழுகின்ற நேரடியாக அல்லது மறைமுகமாக, அருகாமையில் அல்லது தொலைவில் ஏற்படுகின்ற ஏதேனும் விபத்து, இழப்பு, அல்லது சேதம் அல்லது பொறுப்புக்கு (சட்டவாக்கத்தின் தேவைப்பாட்டுக்கு எதிர்கொள்வதற்கு தேவையான வரை தவிர்ந்த) ஏற்புடையதாக மாட்டாது.

அ) யுத்தம், ஆக்கிரமிப்பு, வெளிநட்டு எதிரியின் செயல், அல்லது நடவடிக்கைகள் போன்ற யுத்தம் (ஒன்றில் யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டாலும் அல்லது இல்லாவிட்டாலும்), சிவில் யுத்தம்

ஆ) கலகம், பிரபலமான எழுச்சிக்கு காரணமாகக் கருத்தக்கூடிய அல்லது காரணமாக இருக்கக் கூடிய சிவில் கிளர்ச்சி, இராணுவ எழுச்சி, கிளர்ச்சி, புரட்சி, ஆயுதக்கிளர்ச்சி, இராணுவ அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றல் அல்லது அரசாங்க சட்டநிலை அல்லது நிகழ்நிலையின் அல்லது பயங்கரவாதம் அல்லது வன்முறையின் தூண்டுதலுக்கான சக்தியினால் அல்லது சொல்லப்பட்ட ஏதேனும் நிகழ்வுகளின் நேரடி அல்லது மறைமுக விளைவுகளினால் ஆட்சி கவிழ்ப்பை நோக்கி பணிக்கப்படுகின்ற செயற்பாடுகளுடன் கூடிய ஏதேனும் அமைப்பு சார்பில் அல்லது அத்தகைய அமைப்புடன் தொடர்பில் செயற்படுகின்ற எவரேனும் ஆளின் ஏதேனும் செயல்.

இதன் கீழ் ஏதேனும் உரிமைக்கோரிக்கை இருக்கின்ற சந்தர்ப்பத்தில். சுயாதீனமாக எழுந்த விபத்து, இழப்பு, சேதம் அல்லது பொறுப்பு என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதோடு எந்த வகையிலும் எவையேனும் சொல்லப்பட்ட நிகழ்வுகளின் அல்லது அதன் ஏதேனும் விளைவினால் தொடர்புபட வில்லை அல்லது அவற்றால் ஏற்படவில்லை அல்லது அவற்றால் பங்களிப்புச் செய்யப்பட்டவில்லை என்பதையும் நிரூபிக்க வேண்டும் என்பதோடு அவ்வாறு நிரூபிக்கத் தவறுகின்ற பட்சத்தில், அத்தகைய உரிமைக்கோரிக்கை ஒன்று தொடர்பில் ஏதேனும் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு கம்பனி பொறுப்பாக மாட்டாது.

ஒப்பந்தத்தின் நிபந்தனை 4இல் ஏதேனும் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும் காப்புறுதி பெறுனரின் இறுதியாக அறியப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அத்தகைய அமுல்படுத்தப்படுகின்ற அறிவித்தலை காப்புறுதி வழங்குனர்களால் எந்த நேரத்திலும் இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்படலாம், அத்தகைய விடயத்தில் இரத்துச் செய்கின்ற திகதியிலிருந்து காலாதியாகாத காலத்துக்காக கட்டுப்பணத்தின் மதிப்பிடப்படக் கூடிய பாகம் ஒன்றை காப்புறுதி பெறுனருக்கு காப்புறுதி வழங்குனர் செலுத்துவதற்கு பொறுப்புடையவராவார். காப்புறுதியானது காப்புதி பெறுனரின் வேண்டுகோளுக்கேற்ப முடிவுறுத்தப்பட்டால், கட்டுப்பணத்தின் எந்தத் தொகையையும் திருப்பிச் செலுத்துவதற்கு கம்பனி பொறுப்பாக மாட்டாது என மேலும் வெளிப்படுத்தி உடன்பாடு எட்டப்படுகின்றது.

இந்த விரிவாக்கம் பின்வரும் விலக்கல்களுக்கு அமைவானது என மேலும் வெளிப்படுத்தி உடன்பாடு எட்டப்படுகின்றது.

அ. கதிரியக்க மாசுபாடு, இரசாயனம், உயிரியல், உயிர் இரசாயனம் மற்றும் மின் காந்த ஆயுதங்கள் விலக்கல் உட்பிரிவு

இந்த உட்பிரிவு மிக முக்கியமானது என்பதோடு இந்தக் காப்புறுதியில் இதனுடன் இணங்காத ஏதேனும் விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தால் அதனை மேலோங்கி நிற்கும்

1. பின்வருவனவற்றினால் அல்லது பின்வருவனவற்றின் மூலம் எழுகின்ற நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படுகின்ற அல்லது பங்களிப்புச் செய்கின்ற இழப்பு, சேதம், பொறுப்பு அல்லது செலவினத்தை எம்முறையிலும் இந்தக் காப்புறுதி காப்பீடு செய்யமாட்டாது:

1.1 ஏதேனும் அணு எரிபொருளிலிருந்து அல்லது ஏதேனும் அணு கழிவிலிருந்து அல்லது அணு எரிபொருளின் எரிப்பிலிருந்து கதிரியக்கங்களிலிருந்து அயனாக்கும் கதிர்வீச்சு அல்லது அவற்றின் மூலம் மாசடைதல்ளூ

1.2 ஏதேனும் அணு பொருத்துதல், அணு உலை அல்லது ஏனைய அணு சேர்க்கை அல்லது அதன் அணுக் கூறின் கதிரியக்க நச்சு, வெடிபொருள் அல்லது ஏனைய தீங்கான அல்லது மாசுபடுத்துகின்ற துணிக்கைகள்:

1.3 அணு அல்லது அணுப்பிளப்பு மற்றும்∴அல்லது அணுச்சேர்க்கை அல்லது ஏனைய அதுபோன்ற எதிர்வினை அல்லது கதிரியக்க சக்தி அல்லது விடயத்தை ஈடுபடுத்துகின்ற ஏதேனும் ஆயுதம் அல்லது கருவி:

1.4 ஏதேனும் கதிரியக்க விடயத்தின் கதரியிக்கம், நச்சு, வெடிபொருள் அல்லது ஏனைய தீங்கான அல்லது மாசுபடுத்துகின்ற துணிக்கைகள். அத்தகைய தனிமங்கள் தயாரிக்கப்படுகின்ற போது, சுமந்து செல்கின்ற போது, களஞ்சியப்படுத்துகின்ற போது அல்லது இரசாயன, விவசாய, மருத்துவ, விஞ்ஞான அல்லது ஏனைய அதே போன்ற அமைதியான நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்ற போது இந்த உப பிரிவில் விலக்கல் என்பது அணு எரிபொருளை விடவும் கதிரியக்க தனிமங்களுக்கு விரிவாக்கப்படுவதில்லை.

1.5 ஏதேனும் இரசாயனம், உயிரியல், உயிர் இரசாயனவியல் அல்லது மின் காந்த ஆயுதம்.

ஆ. கணனி தாக்குதல் விலக்கல் உட்பிரிவு

1.1 கீழே 1.2ஆம் பிரிவுக்கு மாத்திரம் அமைவாக, ஏதேனும் கணனி, கணனி முறைமை, கணனி மென்பொருள் நிகழ்ச்சி, தீங்கிழைக்கும் குறியீடு, கணினி வைரஸ் அல்லது செயன்முறை அல்லது ஏதேனும் ஏனைய மின்னியல் முறைமையின் தீங்கை ஏற்படுத்துவதற்கான முறைகளில் ஒன்றாக பயன்பாட்டினால் அல்லது இயக்கத்தினால் அல்லது அதன் மூலம் எழுகின்ற நேரடியாக அல்லது மறைமுகமாக பங்களிப்புச் செய்கின்ற அல்லது காரணமாக இருக்கின்ற இழப்பு, சேதம் பொறுப்பு அல்லது செலவினம் என்பவற்றை எவ்விதத்திலும் இந்தக் காப்புறுதி காப்பீட்டுக்கு உட்படுத்தமாட்டாது.

1.2 யுத்த இடர்கள், சிவில் யுத்தம், புரட்சி, கிளர்ச்சி, எழுச்சி, அல்லது அதிலிருந்து எழுகின்ற சிவில் கலவரம் அல்லது எவரேனும் போர்வெறி அதிகாரம் ஒன்றினால் அல்லது பயங்கரவாதத்தால் அல்லது ஒரு அரசியல் தூண்டலிலிருந்து செயற்படுகின்ற எவரேனும் ஆளினால் அல்லது அதற்கு எதிரான ஏதேனும் விரோதம் என்பவற்றை காப்பீடு செய்கின்ற ஒப்பந்தங்கள் மீது இந்த பிரிவு ஒப்புதல் அளித்தால், முறைமையை ஆரம்பித்தல் மற்றும்.'.அல்லது வழிகாட்டல் முறைமையில் ஏதேனும் கணனி, கணனி முறைமை அல்லது கணனி மென் பொருள் நிகழ்ச்சி அல்லது கணனி மென்பொருள் நிகழ்ச்சி பயன்பாட்டிலிருந்து மற்றும்.'.அல்லது ஏதேனும் ஆயுதம் அல்லது ஏவுகணையின் சுடுதல் பொறிமுறையிலிருந்து எழுகின்ற (அது வேறு வகையில் காப்பீட்டுக்கு உட்பட்டிருக்கும்) இழப்புக்களை தவிர்ப்பதற்கு பிரிவு 1.1 செயற்படுத்தப்படமாட்டாது.

இந்த விரிவாக்கம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்காகவும் மற்றும் அதன் சார்பிலும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதோடு இந்த பிரத்தியேக விரிவாக்கத்தின் கீழ் ஏதேனும் வேறுவகையிலான பொறுப்பானது தனியே சொல்லப்பட்ட நிதியத்தின் மீது பொறுப்புடையதாக இருக்கும்.

ஒப்பந்தத்தின் நியதிகள், நிபந்தனைகள், தவிர்த்தல்கள் மற்றும் விதிவிலக்குகள் மற்றும்படி அமைவானதாகும்.

## 16 – பயங்கரவாதம்

மேலதிக கட்டுப்பணம் ஒன்றைச் செலுத்தியிருப்பதைக் கவனத்தில் கொண்டு, எழுத்து மூல ஒப்பந்தத்தின் உட்பிரிவில் உள்ள வேலை நிறுத்தம், கலகம் மற்றம் சிவில் பதட்டம் என்பவற்றில் முரணாக ஏதேனும் எவ்வாறு உள்ளடக்கப்பட்டிருந்த போதும் இதன் கீழ் வழங்கப்படுகின்ற காப்புறுதியானது, பயம், பயங்கரவாதம் அல்லது வன்முறை என்ற வழிகளால் அல்லது அத்தகைய உந்துதலுடன் அரசாங்கத்தின் நிகழ்நிலை அல்லது சட்டநிலை ஆட்சிக் கவிழ்ப்புக்கு அல்லது தூண்டுதலுக்கு கணிப்பிடப்படுகின்ற அல்லது வழிவகுக்கப்படுகின்ற (ஏதேனும் அமைப்பு) ஏதேனும் செயலினால் ஏற்படுகின்ற அல்லது அவற்றின் தொடர்பினால் நேரடியாக ஏற்படுகின்ற காப்புறுதி செய்யப்படுகின்ற வாகனத்துக்கான பௌதீக ரீதியான இழப்பு அல்லது சேதத்தை காப்பீடு செயவதற்கு விரிவாக்கப்படும்.

ஆயினும் இந்த விரிவாக்கம் பின்வருவனவற்றை காப்பீட்டுக்கு உட்படுத்தமாட்டாதுளூ

(அ) ஏதேனும் வகை அல்லது விபரிப்பின் விளைவாந்தன்மையுடைய அல்லது மறைமுக இழப்பு,

(ஆ) வேலையின் முழுமையான அல்லது பகுதியளவு நிறுத்தம் அல்லது ஏதேனும் செயன்முறை அல்லது நடவடிக்கையின் பாதிப்பு அல்லது இடையூறு அல்லது நிறுத்தத்தின் விளைவால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

(ஆ) ஏதேனும் சட்டரீதியாக உருவாக்கப்பட்ட அதிகார சபையினால் பறிமுதல் செய்தல், உடமைபெறுதல் அல்லது அல்லது தேவைப்படுத்தலிலிருந்து நிரந்தர அல்லது தற்காலிக உடமையகற்றலினால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

ஏதேனும் காப்புறுதி செய்யப்பட்ட ஒரு வாகனத்துக்கான சேதம் தொடர்பில் ஆகக் கூடுதலான பொறுப்பு காப்புறுதி செய்யப்பட்ட தொகைக்கு வரையறுக்கப்பட்டிருக்கும்.

நிதியத்துக்காகவும் மற்றும் அதன் சார்பிலும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதோடு இந்த பிரத்தியேக விரிவாக்கத்தின் கீழ் ஏதேனும் வேறுவகையிலான பொறுப்பானது தனியே சொல்லப்பட்ட நிதியத்தின் மீது பொறுப்புடையதாக இருக்கும். ஒப்பந்தத்தில் முரணாக ஏதேனும் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், காப்புறுதி வழங்குனரால் பயங்கரவாத விரிவாக்கம் இரத்துச் செய்யப்பட்டிருந்தால், சார்பு விகிதம் ஒன்று காப்புறுதி பெறுனருக்கு திருப்பிச் செலுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படும். எவ்வாறாயினும், காப்புறுதி பெறுனரின் வேண்டுகோளுக்கேற்ப இந்த விரிவாக்கம் இரத்துச் செய்யப்பட்டால், கட்டுப்பணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

ஒப்பந்தத்தின் நியதிகள், நிபந்தனைகள், தவிர்த்தல்கள் மற்றும் விதிவிலக்குகள் மற்றும்படி அமைவானதாகும்.

## 17 – கட்டாய மிகை

ஏனைய ஏற்புடைய மிகைகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு மற்றும் சகல உரிமைக்கோரிக்கை தொடர்பிலும் கட்டாய மிகை ஒன்றாக உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகையை நீங்கள் தாங்கிக் கொள்ள வேண்டும்.

## 18 – நிறுவனரீதியான கடன் / ஈடுவைத்தல்

உங்கள் வாகனம் பிணைப்பொறுப்பாக வைக்கப்பட்டு பணம் முற்பணமாக/கடனாக எடுக்கப்பட்டு உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நிறுவனத்திலிருந்து நிறுவனரீதியான கடன்.'. ஈடுவைத்தல் ஒன்றுக்கு உங்கள் வாகனம் அமைவாக இருந்தால், உங்கள் அட்டவணையில் குறிப்பிட்ட நிறுவனத்தை நாம் வாகனத்தின் உரிமையாளராகக் கருதுவோம் என்பதோடு திருத்துதல், மீள்-நிலைப்படுத்துல் அல்லது பதலீடு செய்தல் மூலம் நல்ல நிலைக்கு கொண்டுவர முடியாத ஏதேனும் விபத்து அல்லது இழப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய உரிமைக் கோரிக்கை அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நிறுவனத்துக்கே நாம் வழங்குவோம் என்பதோடு அவரின் அத்தகைய பெறுகையானது முழுமையானதும் மற்றும் இறுதியானதுமான தீர்ப்பனவாக இருக்கும். மேலும், இந்த உட்பிரிவில் வெளிப்படையாக உடன்படுகின்ற விடயங்களைத் தவிர, உங்கள் ஒப்பந்தத்தின் கீழ் உங்களதும் மற்றும் எங்களதும் ஏதேனும் உரிமை அல்லது பொறுப்பை இந்த உட்பிரிவு பாதிக்கமாட்டாது.

## 19 – மாற்று போக்குவரத்து கிரயம்

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் வாகனத்தின் திருத்தத்துக்கு 3 நாட்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளப்பட்டால், மாற்று போக்குவரத்து கிரயமாக 3 நாட்களுக்கு மேலதிகமாக, ஆகக் கூடுதலாக 15 நாட்களுக்கு உங்கள் ஒப்பந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு நாள் அடிப்படையிலான கொடுப்பனவை நாம் உங்களுக்கு செலுத்துவோம். சேதத்தின் அளவைப் பொறுத்து வாகன மதிப்பீட்டாளரின் மதிப்பீடொன்றுக்கு இந்த விரிவாக்கம் அமைவானதாக இருக்கும்.

## 20 – போக்குவரத்தில் உள்ள பொருட்கள் (அபாயகரமானவை)

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் வாகனம் ஏதேனும் பொருளுடன் மோதுவதால் அல்லது பொருளின் தாக்கத்தால் அல்லது வாகனம் விழுதலால் உங்கள் வாகனத்தில் கொண்டு செல்கின்ற போது பொருட்களுக்கு நேரடியாக ஏற்படுகின்ற சேதத்துக்காக இந்த உட்பிரிவு தொடர்பில் உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகை வரை நாம் காப்பீட்டுக்கு உட்படுத்துவோம். பிரத்தியேகமாகக் காப்பீட்டுக்கு உட்படுத்தப்படாவிட்டால், தீ, வெடிப்பு, வேலை நிறுத்தம், கலகம் மற்றும் சிவில் பதட்டம் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றினால் உங்கள் பொருட்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை நாம் காப்பீட்டுக்கு உட்படுத்தமாட்டோம். விபத்து நடக்கின்ற நேரத்தில் உங்கள்

வாகனத்தில் கொண்டு செல்கின்ற பொருட்களின் பெறுமதியானது, உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காப்பீட்டுத் தொகையை விடவும் அதிகமாக இருந்தால், மதிப்பிடத்தக்க பாகம் ஒன்றினால் உங்கள் உரிமைக்கோரிக்கை குறைக்கப்படும்.

பிரத்தியேகமாக காப்பீடு செய்யப்படாவிட்டால், இந்த விவாக்கத்தின் கீழ் தீப்பற்றக் கூடிய திரவங்கள் அல்லது பொருட்கள் நார்ப்பொருள், பருத்தி, பருத்திக் கழிவு, கடதாசிக் கழிவு, இலவம் பஞ்சு, வாயுக்கள், கைத்தொழில் கழிவு, வெடிபொருட்கள் அல்லது ஏனைய அழுகிப்போகக் கூடிய பொருட்களை நாம் காப்பீட்டுக்கு உட்படுத்துவதில்லை.

## 21 - போக்குவரத்தில் உள்ள பொருட்கள் (அபாயகரமற்றவை)

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, உங்கள் வாகனம் ஏதேனும் பொருளுடன் மோதுவதால் அல்லது பொருளின் தாக்கத்தால் அல்லது வாகனம் விழுதலால் உங்கள் வாகனத்தில் கொண்டு செல்கின்ற போது பொருட்களுக்கு நேரடியாக ஏற்படுகின்ற சேதத்துக்காக இந்த உட்பிரிவில் உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகை வரை நாம் உங்களை காப்பீடு செய்வோம்.

பிரத்தியேகமாகக் காப்பீட்டுக்கு உட்படுத்தப்படாவிட்டால், தீ, வெடிப்பு, வேலை நிறுத்தம், கலகம் மற்றும் சிவில் பதட்டம் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றினால் உங்கள் பொருட்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை நாம் காப்பீட்டுக்கு உட்படுத்தமாட்டோம். விபத்து நடக்கின்ற நேரத்தில் உங்கள் வாகனத்தில் கொண்டு செல்கின்ற பொருட்களின் பெறுமதியானது, உங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காப்பீட்டுத் தொகையை விடவும் அதிகமாக இருந்தால், மதிப்பிடத்தக்க பாகம் ஒன்றினால் உங்கள் உரிமைக்கோரிக்கை குறைக்கப்படும்.

### நாம் பின்வருவனவற்றை காப்பீட்டுக்கு உட்படுத்த மாட்டோம்

| | |
|---|---|
| பீங்கான் பொருட்கள் மற்றும் மட்பாண்டபொருட்கள் | ஏதேனும் ஏனைய அழுகிப்போகக் கூடிய பொருட்கள் |
| கண்ணாடிப்பொருட்கள் | ஆபரணங்கள் |
| ஆபரணங்கள் | தளபாடங்கள் |
| வைன் அல்லது மதுசாரங்கள் | கால்நடைகள் |
| விஞ்ஞான உபகரணங்கள் | கடதாசிக் கழிவு |
| நார்ப்பொருட்கள் | சுவர்க் கடிகாரங்கள்/ கைக்கடிகாரங்கள் |
| மின் உபகரணங்கள் அல்லது பாகங்கள் | பருத்தி |
| படங்கள், அச்சுப்பிரதிகள் அல்லது சித்திரங்கள் | பருத்தி கழிவுகள் |
| | வெடிபொருட்கள் |
| கண்ணாடிப் பாத்திரங்களில் உள்ள பொருட்கள் | இலத்திரனியல் பொருட்கள் |
| புகைப்பட கருவிகள் | இலவம் பஞ்சு |
| தீப்பற்றக் கூடிய திரவங்கள் | |
| அல்லது | |

## 22 – பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் களவு

செலுத்தப்படுகின்ற மேலதிக கட்டுப்பணம் ஒன்றுக்கு அமைவாக, கொள்ளை, வீடுடைப்பு அல்லது களவினால் உங்கள் வாகனத்தின் பாகங்கள் உதிரிப்பாகங்கள் அல்லது முக்கிய பாகங்களுக்கு ஏற்படுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்காக நாம் காப்பீட்டை வழங்குவோம். ஏனைய ஏற்புடைய மிகைத்தொகைகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு மற்றுும சகல உரிமைக்கோரிக்கை தொடர்பிலும் ரூபாய் 2,000.00 தொகையை நீங்கள் தாங்கிக் கொள்ள வேண்டும்.

## 23 – கட்டுப்பண கொடுப்பனவு உத்தரவாதம்

(i) இதில் ஏதேனும் எவ்வாறு இருந்த போதும் ஆனால் இதன் பிரிவு (ஹை) மற்றும் (ஹை) என்பவற்றுக்கு அமைவாக, இந்தக் காப்புறுதி தொடர்பில் நிலுவையான மற்றும் செலுத்த வேண்டிய முழுமையான கட்டுப்பணத்தை கம்பனியுடன் உடன்பட்ட கட்டுப்பண காலாவதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் (அத்திகதி ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 60 நாட்களை விடவும் மேற்படாத திகதியாக இருக்கும்) காப்புறுதி வழங்குனருக்கு (கம்பனிக்கு) செலுத்தப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது. அத்தகைய கட்டுப்பண காலாவதித் திகதி இல்லாதவிடத்து,

கட்டுப்பணத்தின் முழுமையான தொகையை (இதற்கு பின்னர் “காலாவதித் திகதி” எனக் குறிப்பீடு செய்யப்படக் கூடிய) ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட திகதி, புதுப்பித்தல் திகதி, சான்றிதல் திகதி, ஒப்புதல் திகதி அல்லது காப்பீட்டுக் குறிப்பின் திகதியிலிருந்து 60 நாட்கள் முடிவில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது.

இந்த உத்தரவாதத்தின் நோக்கத்துக்காக “காலாவதி திகதி” என்பது காப்பீட்டின் ஆரம்ப அல்லது தொடக்க திகதியிலிருந்து கணிப்பிடப்படும்.

(ii) காலாவதி திகதியில் அல்லது அதற்கு முன்னர் முழுமையான கட்டுப்பணத்தை செலுத்துதல் என்பது இந்த ஒப்பந்தத்தின், புதுப்பித்தல் சான்றிதழின், ஒப்புதலின் அல்லது காப்பீட்டுக் குறிப்பின் கீழ் உரிமைக்கோரிக்கை ஒன்றை தீர்ப்பதற்கான காப்புறுதி வழங்குனரின் (கம்பனியின்) பொறுப்புக்கு அல்லது கடப்பாட்டுக்கு முன் நிபந்தனையொன்றாகச் செயற்படும்.

இந்தக் காப்புறுதியின் ஆரம்பத் திகதி மற்றும் தீர்ப்பனவுக்கான காலாவதித் திகதி என்பவற்றுக்கிடையில் ஏதேனும் உரிமைக்கோரிக்கை எழுகின்ற சந்தர்ப்பத்தில், “காலாவதி திகதி” இல் அல்லது அதற்கு முன்னர் முழுமையான கட்டுப்பணத்தை செலுத்தும் வரை காப்புறுதி வழங்குனர் (கம்பனி) பொறுப்பின் மீதான ஏதேனும் தீர்மானத்தை பிற்போடலாம் அல்லது ஏதேனும் அத்தகைய உரிமைக்கோரிக்கையின் தீர்ப்பனவை தாமதப்படுத்தலாம் என இத்தால் மேலும் வெளிப்படுதிதி உடன்பாடு எட்டப்படுகின்றது.

(iii) “காலவதித் திகதி” இல் காப்புறுதி வழங்குனரின் வியாபார முடிவு நாளில் உள்ளவாறு நிலுவையாக உள்ள இதன் கீழ் செலுத்தப்பட வேண்டிய முழுமையான கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டியதாக இருக்கின்றவிடத்து, அப்போது, இந்த காப்புறுதியின் கீழான காப்பீடு மற்றும் இந்தக் காப்புறுதியின் கீழ் ஊகிக்கப்படுகின்ற அல்லது சுமத்தப்படுகின்ற ஏதேனும் கடப்பாடு உடனடியாக இரத்துச் செய்யப்படுவதற்கு, நிறுத்தப்படுவதற்கு மற்றும் மீளப்பெறப்படுவதற்கு காரணமாக இருக்கும்.

எவ்வாறாயினும், அத்தகைய இரத்துச் செய்தல் காலாவதியாகிய காப்புறுதிக் காலத்துக்கு உரித்தாகக் கூடிய தவணை தவறிய முழுமையான கட்டுப்பணம் அல்லது ஏதேனும் அதன் பாகத்தை மீட்டுக் கொள்வதற்கு அல்லது மீளப் பெறுவதற்கான ஏதேனும் சட்டரீதியான எதிர்வாதத்துக்கான காப்புறுதி வழங்குனரின் (கம்பனியின்) உரிமைகளுக்கு பங்கமாக இருக்கமாட்டாது.

# பின் இணைப்பு

உந்துருளிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் தவிர சகல வாகனங்களுக்கான ஏற்புடைய பங்களிப்பு சேதமுற்ற பாகங்களுக்கு பதிலாக புதிய பாகங்கள் பதலீடு செய்யப்படுகின்ற போது.

| thfdj;jpd; taJ | சகல வாகன உடல் பாகங்கள், கண்ணாடிகள் மற்றும் தொழிற்சாலையில் பொருத்தப்பட்ட இணைப்புக்கள | | இயந்திர, மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் | |
|---|---|---|---|---|
| | புதிய வாகனம் | புதிய / மறுசீரமைக்கப்பட்ட வாகனம் | புதிய வாகனம் | புதிய/மறுசீரமைக்கப்பட்ட வாகனம் |
| 1 வருடத்துக்கு குறைவு | 0% | 20% | - | 30% |
| 1 வருடத்துக்கு மேல் | 0% | 35% | 10% | 40% |
| 2 வருடங்களுக்கு மேல் | 0% | 35% | 20% | 50% |
| 3 வருடங்களுக்கு மேல | 15% | 35% | 30% | 50% |
| 4 வருடங்களுக்கு மேல | 20% | 35% | 40% | 50% |
| 5 வருடங்களுக்கு மேல | 25% | 35% | 50% | 50% |
| 6 வருடங்களுக்கு மேல | 30% | 35% | 50% | 50% |
| 7 வருடங்களுக்கு மேல | 35% | 40% | 50% | 50% |
| 8 வருடங்களுக்கு மேல | 40% | 40% | 50% | 50% |

## முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்துருளிகளுக்கு ஏற்புடைய பங்களிப்பு

சேதமுற்ற பாகங்களுக்கு பதிலாக புதிய பாகங்கள் பதலீடு செய்யப்படுகின்ற போது.

| | சகல வாகன உடல் பாகங்கள், கண்ணாடிகள் மற்றும் தொழிற்சாலையில் பொருத்தப்பட்ட இணைப்புக்கள் | இயந்திர, மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் |
|---|---|---|
| 1 வருடத்துக்கு குறைவு | - | 25% |
| 1 வருடத்துக்கு மேல் | 10% | 30% |
| 2 வருடங்களுக்கு மேல் | 15% | 40% |
| 3 வருடங்களுக்கு மேல் | 20% | 50% |
| 4 வருடங்களுக்கு மேல் | 25% | 50% |
| 5 வருடங்களுக்கு மேல் | 30% | 50% |
| 6 வருடங்களுக்கு மேல் | 35% | 50% |
| 7-10 வருடங்களுக்கு மேல் | 40% | 50% |
| 10-20 வருடங்களுக்கு மேல் | 40% | 50% |
| 20 வருடங்களுக்கு மேல் | 40% | 50% |

கலப்பு.்.மின்சார (Hybrid/Electrical) வாகனங்கள் தவிர்ந்த சகல வகுப்பு வாகனங்களுக்காகவும் டயர்கள்/டியூப்கள் மற்றும் பட்டறிகளுக்காக ஆகக் கூடுதலாக உரிமையாளரின் பங்களிப்பு 50% சதவீதமாகும்.

குறுங்கால பணமீளப்பெறுதல் விகித அட்டவணை

வாடிக்கையாளர் கோரிக்கையின் படி ரத்து செய்தலின் போதும் இது பொருந்தும்

| பாவனைக்காலம் | பணம் மீளப்பெறும் வீதம் (அடிப்படை தவணைக்கட்டணத்திலிருந்து) |
|---|---|
| 1 வாரத்திற்கும் குறைவு | 87.50% |
| 1 மாதம் வரை | 75% |
| 2 மாதங்கள் வரை | 62.50% |
| 3 மாதங்கள் வரை | 50% |
| 4 மாதங்கள் வரை | 37.50% |
| 6 மாதங்கள் வரை | 25% |
| 8 மாதங்கள் வரை | 12.50% |
| 8 மாதங்களுக்கு மேல் | பணம் மீளப்பெற முடியாது |